THE "VAKIL"—TAMIL LAW MAGAZINE FOR THE CITIZEN

651

"வக்கீல்"

MADRAS
657
4.57.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

★

இந்த இதழில்

•••○○○•••

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்
அல்லது
இந்து மத தர்ம பரிபாலனைச்
சட்டம்

பார்லிமெண்டால் அங்கீகரிக்கப்
பட்ட தேர்தல் தொகுதிகள்

விற்பனை வரி விதிகள்
திருத்தம்

சென்னை வரதட்சிணைத் தடை
மசோதா

வழக்கும் - தீர்ப்பும்

கேள்வி - பதில்

விபரம் உள்ளே பார்க்கவும்

★

THE "VAKIL" — அக்டோபர்-1951 — 4 அணா

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை.
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B:-(1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் PO. S. A. Dt.

ஸ்தாபிதம்
1942

தந்தி
"லலிதாலய"

உயர்தர ஆயுர்வேத சிகிச்சைக்கும்
மருந்துக்கும்

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை
கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு.

பிராஞ்சு
78, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு
நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி சோப்

தயாரிப்பவர் :—
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா	ரூ. 3—0—0
விசேஷ வருட சந்தா	ரூ. 6—0—0
ஷ வெளிநாடு	ரூ. 10—0—0
ஆயுள் சந்தா	ரூ. 100—0—0

சந்தாதார்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்ட வேண்டியதில்லை. அவர்களுக்கு "வக்கீல்" இதழ்களும், வருட முடிவில் சேர்த்து பைண்டு செய்யப் பொருள் அட்டவணையும், "வக்கீல்" சப்ளிமெண்டுகளாகப் பிரசுரம் செய்யப்படும் எல்லாப் புத்தகங்களும் அவ்வப்பொழுது அனுப்பிக்கொண்டு வரப்படும். "வக்கீல்" பத்திரிகையின் சந்தா இனி உயர்த்தப்பட்டாலும், அல்லது "வக்கீல்" மாதம் இருமுறை அல்லது வாரப் பத்திரிகையாகச் செய்யப்பட்டாலும், ஆயுள் சந்தாதார்கள் புதிய கட்டணம் கட்டவேண்டியதில்லை. ஆயுள் சந்தாதாரர்களாகச் சேரவிரும்பும் அன்பர்கள் அது சம்பந்தமான விவரங்களையும் அவர்களுக்குள்ள மற்ற சலுகைகளையும் தெரிந்துகொள்ள நேரில் "வக்கீல்" காரியாலயத்திற்கு எழுதவும்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 அக்டோபர் 1951 இதழ் 10

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும் செய்திகளும்	2
புதிய சட்டங்கள்	3
சென்னை வரதட்சிணைத் தடை மசோதா	4
அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் அல்லது இந்து மத தர்ம பரிபாலனச்சட்டம் (1951)	5
தேர்தல் (எலெக்ஷன்) சம்பந்தமான புதிய சட்டங்கள். தமிழ் ஜில்லா தொகுதிகள்	14
வழக்கும் - தீர்ப்பும்	18
விற்பனை வரி விதி திருத்தம்	22
கேள்வி - பதில்	23

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்

தபால் பெட்டி 26 :: கும்பகோணம்

(தென் இந்தியா)

—என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

187712

வக்கீல்

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

மலர் 3 அக்டோபர் 1951 இதழ் 10

குறிப்புகளும் - செய்திகளும்

நேரு! சென்ற மாதத்தில் எல்லோரையும் விட அதிகமாக வசைச் சொற்களுக்குட்பட்டவர் நமது பிரதம மந்திரி நேருவே. அவர் பிரதம மந்திரியாக இருக்கும்போதே காங்கிரஸ் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 'சர்வாதிகாரி'யாகி விட்டாரென்று ஒரு சாரார் கூக்குரலிடுகின்றனர். இல்லை; நேரு உண்மையில் ஒரு 'கம்யூனிஸ்ட்' என்ற பொது உடைமைக்காரர் என்று ஒரு மாஜி மந்திரி நமக்கு ரகசியமாகப் பத்திரிகைகள் மூலம் தெரிவித்திருக்கிறார். தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் ஒருவரை ஒருவர் எப்படியாவது அழைத்துக் கொள்ளட்டும். ஆனால் மனதில் தோன்றியதை மறைக்காமல் பட்டவர்த்தனமாகச் சொல்லும் சுபாவமுள்ள நேரு நமது ஜோதிடர்களிடம் மாட்டிக் கொண்டதுதான் பரிதாபமாக இருக்கிறது! செப்டம்பர் 9-ஆம் தேதி பாகிஸ்தான் யுத்தம் ஆரம்பமாகும் என்று ஒரு டில்லி ஜோதிடர் சொல்லியதை ஒரு மீட்டிங்கில் நேரு கண்டித்தார். அதைச் சாதாரணமாகக் கண்டித்திருக்கக் கூடாதா? ஜோதிடர்களின் தொழிலையும் ஜோதிடம் சொல்வதையும் வேரோடு இந்நாட்டில் களைந்துவிடச் சட்டங்கள் வேண்டுமென்பது தம் சொந்த அபிப்பிராயம் என்று ஒரு கர்ஜனை செய்தார். டில்லி ஜோதிடரின் ஜோதிடம் என்னவோ பலிக்கவில்லை. ஏனென்றால் பாகிஸ்தான் யுத்தம் வரவில்லை. ஆனால் அவ்வித ஜோதிடத்தினால் ஏற்பட்ட குழப்பத்தைப் பேச்சினால் அடக்க ஒரு தனி மனிதரால் முடியுமென்றால் அது நேருவைத் தவிர வேறு யாரால் முடியும்? நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் ஜோதிடர்கள் நேருவின்மீது வசைச் சொற்களை அடுக்கிக்கொண்டு போகின்றனர். ஜோதிடப் பகுதிகள் போட்டு வரும் பத்திரிகைகள் என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அதற்குள் மேல்நாடுகளில் ஜோதிடம் சொல்வது சட்டப்படி தடுக்கப் பட்டிருக்கிறதா என்ற விஷயத்தை நமது நேயர்கள் அடுத்து வரும் "வக்கீல்" இதழ்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

ஜெனரல் ஆஸ்பத்திரி: சென்னை ராஜ்யத்தில் மிகப் பெரிய சர்க்கார் வைத்தியசாலைதான் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி. மற்ற டவுன்களிலும் நாட்டுப்புறங்களிலும் டாக்டர்களுக்குப் பிடிபடாத வியாதிகளையும், நவீன சாதனங்களாலேயே சிகிச்சை செய்யப்படவேண்டிய வியாதிகளையும் போக்கிக் கொள்ளும் எண்ணத்துடன்தான் பலர் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போகின்றனர். பொது மக்களுக்கும், டாக்டர்களுக்கும், மற்ற ஆஸ்பத்திரிகளுக்கும் சுத்தத்திலும் வைத்திய முறைகளைக் கையாளுவதிலும் ஓர் வழிகாட்டியாகவே ஜெனரல் ஆஸ்பத்திரி கருதப்படுகிறது. இந்த ஆஸ்பத்திரியில் சென்றமாதம் நடந்த ஓர் சம்பவம் இங்கிலாந்தில் நடந்திருந்தால் அங்கிருக்கும் மந்திரிசபை கவிழ்ந்திருக்கும். ஏனென்றால் வேறு எந்த வியாதிகளுக்கோ சிகிச்சை செய்து கொள்ள மதராஸ் ஜெனரல் ஆஸ்பத்திரியில் தங்கிய பல நோயாளிகளுக்குத் திடீரென்று காலரா கண்டது. பலர் மாண்டனர். காலரா என்பது ஜலம் பால் போன்ற திரவ பதார்த்தங்களாலேயே பரவக்கூடிய ஒரு கொடிய வியாதி. இது சர்க்கார் தலைநகர் வைத்தியசாலையில் எப்படி நேர்ந்தது; எத்தனை பேர் மாண்டனர்; எத்தனை பேர்கள் பிழைத்தனர்; இதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் யார் என்பதைப் பற்றி, துரிதமாக விசாரணை செய்து உண்மை விஷயங்களைப் பொது மக்களுக்கு உடனே தெரிவிப்பதுடன், சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் என்ன என்பதையும் பொதுமக்கள் தெரிந்து கொள்ள உரிமை உள்ளவர்கள். காலரா எவ்வளவு வேகமாகப் பரவியதோ அவ்வளவு வேகமாக இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுத்துக் கொள்வதுதான் ஒரு உண்மை ஜனநாயக சர்க்காரின் கடமையாகும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

44. **அபின் வரிச்சட்டங்கள் விஸ்தரிப்புத் திருத்தச் சட்டம்.** The opium and Revenue Laws Extension of Application Amendment Act 1951. (24-8-1951) அபின் சட்டமும் வேறு சில வரிச் சட்டங்களை இப்பொழுது இந்தியாவைச் சேர்ந்த பழைய சமஸ்தானங்களுக்கும் விஸ்தரிக்கும் 1950-ம் வருட மத்திய சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

45. **கடல் சுங்கம், மத்திய சுங்கம் உப்புச் சட்டங்கள் திருத்தச் சட்டம்.** The Sea Customs and The Central Excises and Salt Amendment Act 1951. (27-8-1951) ராஜ்ய சர்க்கார்களால் வியாபார சம்பந்தமாக வரவழைக்கப்படும் பண்டங்களுக்கும் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளுக்கும் கடல் தீர்வை, சுங்கவரி இவைகள் உண்டு என்று அச்சட்டங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன.

1951-ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச்சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை-சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

18. **சென்னை அங்க சாஸ்திரச் சட்டம்** The Madras Anatomy Act 1951 (14-8-1951) ஆஸ்பத்திரிகளில் உயிரிழக்கும் நாதியற்ற பிரேதங்களை உறவினர்கள் ஒருவரும் குறிப்பிட்ட காலத்திற்குள் கேட்காவிட்டால் சென்னை, குண்டூர், விசாகப்பட்டணம் இந்த இடங்களில் உள்ள வைத்தியக் கல்லூரிகளுக்கு பரிசீலனை அல்லது ஆராய்ச்சிக்காக அனுப்புவதற்கான விதிகள் அடங்கிய சட்டம்.

19. **அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் என்ற சென்னை இந்து மத-தர்ம பரிபாலனச் சட்டம்.** The Madras Hindu Religious and Charitable Endowments Act 1951 (28-8-1951) இம்முக்கிய சட்டம் இந்த இதழில் விவரமாய் விளக்கப்பட்டிருக்கிறது.

20. **சென்னை மந்திரிகள் முதலியோர் சம்பளச்சட்டம்.** Madras payment of Salaries and Removal of Disqualifications Act 1951 (11-9-1951) சென்னை மந்திரிகளுக்கும், சட்டசபைகள் அங்கத்தினர்களுக்கும், சட்டசபைகளின் தலைவர்கள் உபதலைவர்களுக்கும், பார்லிமெண்டரி காரியதரிசிகளுக்கும் கொடுக்கப்பட வேண்டிய மாதச் சம்பளம், வீட்டு வாடகை, போக்குவரத்து செலவு, பிரயாணச் செலவு இவைகளை நிர்ணயம் செய்யும் சட்டம். ஒரு மந்திரியோ, அல்லது அவருடைய குடும்பத்தினரோ சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வாடகையில்லாமல் இருந்து வரவும், இனமாக சிகிச்சைகள் செய்து கொள்ளவும் இச்சட்டப்படி அவர்களுக்கு உரிமை உண்டு. இச்சட்டத்திற்கு முன் இவ்விதம் இவர்கள் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இருந்து சர்க்கார் பணத்தைக்கொண்டு சிகிச்சைகள் செய்து கொண்டிருந்தாலும் அதுவும் சட்ட பூர்வமாக்கப்பட்டிருக்கிறது.



உலையில்

இப்பகுதியில் இருப்பவை இன்னும் சட்டமாகவில்லை. சட்டங்கள் இயற்றப்படுமுன், அவ்விஷயத்தைப்பற்றிய பூர்வாங்க நடவடிக்கைகள், அதாவது, கமிட்டியின் சிபார்சுகள், மசோதாக்கள், பொறுக்குக்கமிட்டி ரிப்போர்டுகள், சர்க்கார் அறிக்கைகள் போன்ற விஷயங்களை நேயர்கள் இப்பகுதியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

சென்னை வரதட்சிணைத் தடை மசோதா

சென்னைச் சட்ட சபையால் சட்டமாகச் செய்யப்படுவதற்காக, 4—9—1951 தேதியுள்ள சர்க்கார் கெஜட்டில் இம்மசோதா பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இது சர்க்காரால் கொண்டுவரப்படும் மசோதா அல்ல. சட்டசபை அங்கத்தினர் திரு. A. காளேசுவர ராவ் அவர்களால் கொண்டுவரப்படுகிறது. சென்னை ராஜ்யத்தில் ஸ்திர வாசமுள்ளவர்களுக்கும் சென்னை ராஜ்யத்தில் நடக்கும் திருமணங்களுக்கு மட்டுமே இம்மசோதா. இது சட்டமானல்—வரதட்சிணை கொடுப்பதும், கொடுப்பதாக ஒப்புக்கொள்வதும், வாங்குவதும், வாங்கிக் கொள்வதாக ஒப்புக்கொள்வதும் சட்ட விரோதமான செய்கைகளாகவும் குற்றங்களாகவும் ஏற்படும். அதற்கு ஒரு வருடம் வரை வெறுங் காவலோ, கடுங்காவலோ விதிக்கப்படும். மேற்கொண்டு அபராதமும் விதிக்கப்படும்.

இவ்விதமான குற்றங்கள் செய்யப்படுவதற்கு உதவியாக இருக்கும் கலியாண தரகர்கள் போன்றவர்களுக்கு ஆறு மாதம் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். இக்குற்றங்கள் செய்பவர்களைப் போலீசாரே அரெஸ்டு செய்யலாம். இதற்காகப் போடப்படும் கிரிமினல் கேசுகளை ராஜி செய்து கொள்ளவும் முடியாது. வரதட்சிணை கொடுப்பதாக ஒப்புக் கொண்டவர் மீது அதை வசூல் செய்யக் கோர்ட்டில் தாவா போட முடியாது. ஆனல் வரதட்சிணை கொடுத்துவிட்டு, ஏமாந்து போனவர்கள் அதையோ அதன் மதிப்பையோ திருப்பி வாங்க மட்டில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இதற்காக அதிக ஸ்டாம்பு கட்டி தாவா போடவேண்டியதில்லை. ரூபாய் 15 மட்டில் ஸ்டாம்பு கட்டி, கோர்ட்டில் மனுக் கொடுத்தாலே போதும். ஆனல் இவ்வித மனுக்கள் வரதட்சிணை கொடுத்த இரண்டு வருடங்களுக்குள் போடப்பட வேண்டும்.

வரதட்சிணை என்ருல் என்னவென்றும் விளக்கப்பட்டிருக்கிறது. மணமகள் அல்லது கலியாணம் செய்துகொள்ளும் பெண்ணின் சார்பாக, அவளுடைய பெற்ருேர்களோ, கார்டியனே மணமகனுக்கோ, பெண்ணுக்கோ, அல்லது அவர்கள் சார்பாக வேறு எவருக்கோ கொடுக்கப்படும் எவ்வித ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும் 'வரதட்சிணை' (Dowry) எனப்படும். கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்படும் சொத்துக்களும் 'வரதட்சிணை' தான். அப் பெண்ணை மணமகன் கலியாணம் செய்து கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டவையாக இவை இருக்கவேண்டும். ஆனல் எல்லாம் ரூபாய் 300க்கு அதிகப்படாத மதிப்புள்ள ஆடைகளையோ வேறு சாமான்களையோ திருமணம் நடக்கும் சமயத்தில் மணமகனுக்கோ மணமகளுக்கோ கொடுப்பதற்கு மட்டில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இஸ்லாமிய சட்டப்படி கொடுக்கப்படும் மஹர் தொகையை இச்சட்டம் பாதிக்காது. இம்மசோதாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "எதுக்களையும் நோக்கங்களையும் பற்றிய விவரணத்தில்" திருமணங்கள் கடைத் தெருவில் செய்யும் ஒரு பேரமாகிவிட்டதென்றும் மணமகன்கள் தங்களை ஓர் விற்பனைப் பண்டமாக்கிக் கொண்டு விட்டனரென்றும் அதைத் தடுக்கவே இம்மசோதா கொண்டுவரப் பட்டிருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்

அல்லது

இந்து மத-தர்ம பரிபாலனச் சட்டம் (1951)

[The Madras Hindu Religious and charitable Endowments Act 1951. சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 1951-ஆம் வருடத்திய 19-ஆவது சென்னைச் சட்டம். 27—8—1951ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 28—8—1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 30—9—1951 தேதி முதல் இச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது.]

இந்துக்களுக்கு மட்டில்

நீங்கள் ஒரு இந்துவாக இருந்தால்தான் இச்சட்டத்தை நுட்பமாகக் கவனித்து வாசிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனென்றால் இது இந்துக் கோயில்களைப் பற்றியும், இந்து மடங்களைப் பற்றியும், இந்து தர்மங்களைப் பற்றியும், அவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பற்றியும் அவைகளின் நிர்வாகத்தைப் பற்றியுமே வகுக்கப்பட்ட ஓர் சட்டம். கோயில் ஊழியர்களாகவும், டிரஸ்டிகளாகவும், மடாதிபதிகளாகவும் இருப்பவர்கள் மட்டில்தான் இந்துக்களாக இருக்கவேண்டுமென்று நினைக்காதீர்கள். இந்தக் கோயில்களின் நிர்வாகத்தையும் இந்து மடங்களின் நிர்வாகத்தையும் இச்சட்டத்தின் மூலம் நமது சர்க்காரே நேரடியாக மேற்பார்வை பார்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதற்காகச் சர்க்காரால் இச்சட்டப்படி நியமிக்கப்படும் பெரிய அதிகாரிகளும் சரி, சின்ன அதிகாரிகளும் சரி எல்லோரும் இந்துக்களாகவேதான் இருப்பார்கள். இச்சட்டத்தை அமுல் நடத்தும் எந்த அதிகாரியும் இந்து மதத்தைவிட்டு விலகினால் அவர் வகிக்கும் அதிகாரப் பதவியையும் இழப்பார். அப்படியே இச்சட்ட சம்பந்தமாக நியமிக்கப்படும் குமாஸ்தாக்களும் சிப்பந்திகளும் கூட இந்துவாகத்தான் இருக்க வேண்டுமென்று செக்ஷன் 9 வற்புறுத்துகின்றது. மத ஸ்தாபனங்களைப் பொறுத்து பொதுவாக மேற்பார்வை பார்க்கும் அதிகாரத்தைக்கூட இச் சட்டம் ஓர் இந்து கமிஷனரிடமே ஒப்படைத்திருக்கிறதே ஒழிய அவ்வதிகாரம் 'சர்க்கார்' என்று சொல்லக்கூடிய மந்திரி சபையிடம் இல்லை. செக்ஷன் 20ஐப் பார்க்கவும். சர்க்காருக்கும் சில அதிகாரங்கள் இச்சட்டத்தால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை எல்லாம் கமிஷனர் முதலிய இந்து அதிகாரிகளை நியமிக்கும் உரிமையும், கமிஷனர் முதலிய அதிகாரிகள் செய்த உத்தரவுகளின் மீது அப்பீல்களையும் பரிசீலனை மனுக்களையும் கோர்ட்டுக்களைப் போலவே, ஆராய்ந்து அவை எல்லாம் இச்சட்ட ஷரத்துக்களை ஒட்டி செய்யப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கும் அதிகாரமும்தான் என்று கூடச் சொல்லலாம்.

புதிய சட்டத்தால் பாதிக்கப்படமாட்டா

ஒரு கோயில் அல்லது மடத்தில் மாமூல் பாத்தியமாகவோ வேறு வகைப் பாத்தியமாகவோ ஒருவர் கொண்டாடக் கூடிய மரியாதை, ஊதியம் வரும்படி இவைகளை இச்சட்டம் பாதிக்காது. அதாவது இவ்விஷயங்களைப்பற்றி இச்சட்டத்தில் ஏதாவது வேறு வகையாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய மேற்கண்டவைகள் பாதிக்கப்படமாட்டா.

மேலும் ஒரு மடாதிபதியால் செய்யப்படும் மத சம்பந்தமான அல்லது பாரமார்த்திகமான போதனை அல்லது செய்கைகளில் தலையிட எவருக்கும் இச்சட்டம் இடங் கொடுக்காது. (செக்ஷன் 91)

மேலும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 26, a, b, c ஆக குறிப்பிடப்பட்டிருக்கும் மத சம்பந்தமான பக்களின் ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக எந்த அதிகாரிகளுக்கும் இச்சட்டத்தால் அதிகாரம் அல்லது உரிமை கொடுத்ததாகவாவது, அதற்கு மாறாக இச்சட்டம் ஓர் கடமையை ஏற்படுத்தியதாகவாவது இச்சட்டத்தின் எந்த ஷரத்தக்கும் அர்த்தம் செய்யப்படக் கூடாது என்று செக்ஷன் 92ல் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

கோயில்களும் மடங்களும்

இச்சட்டம் சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா "ஹிந்து பொது மத ஸ்தாபனங்களுக்கும்" (Hindu Public Religious Institutions) அவைகளைச் சேர்ந்த சொத்துக்களுக்கும் கட்டளைகளுக்கும்தான் முதல் முதல் அமுலுக்கு வரும். திருமலை-திருப்பதி தேவஸ்தானமும் இதில் சேர்ந்ததே. "மதஸ்தாபனம்"

(Religious Endowment) என்ருல் கோயில்களையும் மடங்களையும் அவைகளைச் சேர்ந்த கட்டளைகள் மூன்றையும் குறிப்பிடும். ஆகையால் பிரித்துக் 'கோயில்' அல்லது 'மடம்' என்று சொல்லாமல் "மத ஸ்தாபனம்" என்று இச் சட்டத்தில் சொல்லப்படும் போதெல்லாம் கோயில்கள் மடங்கள் மத சம்பந்தமான தனிக் கட்டளைகள் இம்மூன்று ஸ்தாபனங்களையும் குறிக்கும். ஆனல் இவை எல்லாம் இந்துக்கள் எல்லோருக்குமோ இந்துக்களில் ஒரு பிரிவினருக்கோ பொதுவாக உள்ள ஸ்தாபனங்களாக இருக்கவேண்டும். பொதுமக்கள் எவருக்கும் எவ்வித சம்பந்தமில்லாத ஒரு தனி நபர் அல்லது குடும்பத்திற்கு மட்டில் பாத்தியமும் உரிமையும் உள்ள இடங்கள் "பொது" மத ஸ்தாபனங்கள் ஆகமாட்டா.

மத சம்பந்தமில்லாத தர்மங்கள்

மத ஸ்தாபனங்கள் அல்லாத ஹிந்து பொதுத் தர்மங்கள் பல உள. தர்ம சத்திரங்கள், அன்ன சத்திரங்கள், பாடசாலைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் போன்ற ஹிந்துக்களால் ஸ்தாபிக்கப்பட்ட பல தர்ம ஸ்தாபனங்களும் ஹிந்துக்களின் உபயோகத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பல தர்ம சொத்துக்களும் இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றிற்கும் இச்சட்டம் கிடையாது. ஆனல் எந்தக் குறிப்பிட்ட தர்ம ஸ்தாபனமாவது சொத்தாவது சரிவர நிர்வாகம் செய்யப்படவில்லை என்று சர்க்காருக்குத் தோன்றினல், அத்தர்ம ஸ்தாபனத்திற்கும் அதன் சொத்துக்கும் இச்சட்ட ஷரத்துக்கள் எல்லாவற்றையுமோ சிலவற்றையோ விஸ்தரிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சர்க்கார் இப்படிச் செய்யு முன் அத்தர்மம் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தங்கள் ஆட்சேபனைகளைச் சொல்லிக்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படும். ஜயின பொதுத் தர்மங்களுக்கும் இப்படியே செய்யலாம்.

ஜயினர்களின் கோயில்களும், மடங்களும்

இவர்களுக்கும் இப்பொழுது இச்சட்டம் கிடையாது. ஆனல் முன் சொன்னபடி இவர்களுக்கு இச்சட்டம் முழுவதையுமோ சில ஷரத்துக்களை மட்டுமோ விஸ்தரிக்கச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

பழைய அதிகாரிகள்

பழைய சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்டிருந்த இந்து மதஸ்தாபன பரிபாலன போர்டு (Hindu Religious Endowments Board) என்ற சபை போய்விடும். ஆனல் அதன் சொத்துக்கள் சர்க்காரைச் சேரும். போர்டின் தலைவரையும் மற்ற அங்கத்தினர்களையும், சிப்பந்திகளையும் சர்க்கார் இச்சட்டப்படிக்கான பதவிகளில் நியமிக்கலாம்; அப்படி நியமிக்கப்படாதவர்கள் வேலையை இழப்பார்கள். பழைய சட்டப்படி செய்யப்பட்ட விதிகள் அறிக்கைகள் உத்தரவுகள் எல்லாம் புதிய சட்டப்படி செய்யப்பட்டவையாகவே பாவிக்கப்படும்.

புதிய அதிகாரிகள்

இச்சட்டத்தை அமுல் நடத்த நான்கு வகை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். அவராவர்:-

(1) கமிஷனர் (The Commissioner)

(2) டிப்டி கமிஷனர் (Deputy Commissioner)

(3) உதவிக் கமிஷனர் (Assistant Commissioner)

(4) பிரதேச கமிட்டிகள் (Area Committees)

சென்னை ராஜ்யம் முழுவதற்கும் ஒரே ஒரு கமிஷனர்தான் இருப்பார். அவருக்குக் கீழே ஒன்று அல்லது சில டிப்டிகமிஷனர்கள் பல ஜில்லாக்களுக்கு ஒருவர் இருப்பார். அவர்களுக்கும் கீழே பல உதவிக் கமிஷனர்கள் இருப்பார்கள். ஒவ்வோரு உதவிக் கமிஷனரின் அதிகார எல்லைக்கும் ஒரு 'பிரதேச கமிட்டி' ஒன்று இருக்கும். இக்கமிட்டிகள், வருட வருமானம் ரூ. 20000-க்கு மேற்படாமலிருக்கும் எல்லாக் கோயில்கள் மீது மட்டில் அதிகாரம் செலுத்தும். ஒவ்வொரு பிரதேச கமிட்டியிலும் குறைந்தது மூன்று அங்கத்தினர்களாவது இருப்பார்கள். எந்தப் பிரதேச கமிட்டியிலும் ஐந்து பேர்களுக்குமேல் அங்கத்தினர்கள் கிடையாது. மேற்கண்ட எல்லா அதிகாரிகளையும், பிரதேச கமிட்டியின் அங்கத்தினர்களையும் சர்க்காரே நியமிப்பார்கள். ஒவ்வொரு வகை அதிகாரிக்கும் என்ன என்ன அதிகாரங்கள் உண்டென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் 'கமிஷனர்' செய்ய வேண்டியதாக இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங்களில் சில தவிர, மற்ற எந்த அதிகாரத்தையும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலோ, குறிப்பிட்ட வகையுள்ள ஸ்தாபனங்கள் விஷயத்திலோ ஒரு 'டிப்டி கமிஷனர்' செலுத்தும்படி அவருக்கு மாற்றலாம். அவ்விதமே உதவிக் கமிஷனருக்கும் கமிஷனர் செய்யவேண்டியதாக இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மாற்றப் படலாம்.

பரம்பரை டிரஸ்டிகள்

இப்புதுச் சட்டத்தில் 'பரம்பரை டிரஸ்டி' (Hereditary Trustee) என்றால் வார்சு முறையில் ஒரு கோயிலுக்கு டிரஸ்டி அல்லது தர்மகர்த்தாவாக இருக்க உரிமையுள்ளவர்களைக் குறிக்கும். மாமூல் அல்லது வழக்கத்தை அனுசரித்தோ, அந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்தியவர் செய்திருக்கும் ஒரு ஏற்பாட்டின் படியோ ஒருவர் டிரஸ்டியாக வரப் பாத்தியமுள்ளவராக இருந்தாலும் அவரும் 'பரம்பரை டிரஸ்டி' தான். மாமூலை அனுசரித்து மடாதிபதிகளாக வருபவர்களும் இச்சட்டத்தில் 'பரம்பரை டிரஸ்டிகள்' எனப்படுகின்றனர்.

பொதுவாகச் சொல்லுமிடத்து, ஒரு கோயிலுக்குப் பரம்பரை டிரஸ்டிகள் இருந்தாலும் பரம்பரைப் பாத்தியமில்லாத டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் எல்லோரும் இப்புதுச் சட்டப்படி கிட்டத்தட்ட ஒரே வகையான விதிகளுக்கே உட்பட்டிருக்கின்றனர் என்று சொல்லலாம். ஏனென்றால் பரம்பரை டிரஸ்டிகளையும் தள்ளிவிடவும் 'சஸ்பெண்டு' செய்யவும் இச்சட்டப்படி அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மடாதிபதிகளும் 'டிரஸ்டி'களாகவே பாவிக்கப்படுகிறபடியால் ஒரு மதஸ்தாபனத்தின் டிரஸ்டிகளுடைய கடமைகளைப்பற்றிய எல்லாப் பொது விதிகளும் மடாதிபதிகளுக்கும் பொருந்தும். ஆனால் ஒரு கோயிலின் பரம்பரை டிரஸ்டியை நீக்குவது போல் ஒரு மடாதிபதியை நீக்கும் அதிகாரம் இச்சட்டப்படி எந்த அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படவில்லை. ஒரு மடாதிபதியை நீக்கவேண்டுமென்று இச்சட்ட அதிகாரி ஒருவர் தீர்மானம் செய்தால், அவர் அதற்காகச் சிவில் கோர்ட்டில் தாவாதான் செய்யவேண்டுமே ஒழிய அவரைத் தாமே நீக்கி விடமுடியாது. இதுதான் மடாதிபதிகளுக்குக் காண்பிக்கப்பட்டிருக்கும் சலுகை. மேலும் இச்சட்டத்தின் சில ஷரத்துக்களை ஒரு 'டிரஸ்டி' மீறுவது குற்றமாக்கப்பட்டிருக்கிறது. மடாதிபதிகளும் இவ்விதிக்குட்பட்டவர்களே. இவ்விஷயங்களைப் பிறகு விவரமாய்க் கவனிப்போம்.

மூன்று வகை கோயில்கள். 'டிரஸ்டி' நியமிப்பது யார்?

இச்சட்டப்படி எல்லாக் கோயில்களையும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன :—

(1) வருட வருமானம் ரூ. 20,000 அல்லது அதற்குமேல் உள்ள கோயில்கள்.

(2) வருட வருமானம் ரூ. 20,000-க்குட்பட்ட கோயில்கள்.

(3) அறிக்கையிடப்பட்ட கோயில்கள் (Notified Temples).

வருட வருமானம் ரூ. 20,000 அல்லது அதற்குமேல் உள்ள கோயில்கள் எவை எவை என்று குறிப்பிட்டு ஜாப்தா வெளியிடக் கமிஷனருக்கு செக்ஷன் 38-ன்படி அதிகாரம் உண்டு.

வருட வருமானம் ரூபாய் 20,000 அல்லது அதற்குமேல் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும், பரம்பரை டிரஸ்டிகள் (தர்மகர்த்தாக்கள்) இல்லாவிட்டால், ஒரு 'டிரஸ்டிகள் சபை' (Board of Trustees) அமைக்கப்படும். டிரஸ்டிகளைக் கமிஷனரே நியமிப்பார். டிரஸ்டிகள் மூன்று பேர்களுக்குக் குறையாமலும் ஐந்து பேர்களுக்கு அதிகப்படாமலும் இருப்பார்கள். இப்போது பரம்பரை டிரஸ்டிகளும், பரம்பரை பாத்தியமில்லாத டிரஸ்டிகளும் இருந்துவரும் கோயில்களுக்குப் பரம்பரைப் பாத்தியமில்லாத டிரஸ்டிகளைத்தான் கமிஷனர் நியமிப்பார். சாதாரணமாய் நியமிக்கப்படும் ஒவ்வொரு டிரஸ்டியும் 5 வருடம் பதவி வகிப்பார்.

ரூ. 20,000-க்குட்பட்ட வரும்படி உள்ள கோயில்களுக்குப் 'பிரதேச கமிட்டி'யார்தான் டிரஸ்டிகள் நியமிப்பார்கள். பிரதேசக் கமிட்டி கூடும்போது உதவி கமிஷனர் அக்கிராசனம் வகிப்பார். ஆனால் அவருக்கு ஓட் கிடையாது. பரம்பரைப் பாத்தியமுள்ள டிரஸ்டிகள் இல்லாத ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரே டிரஸ்டிதான் நியமிக்கப்படுவார். இவ்வித டிரஸ்டிகளுக்கும் பதவிக் காலம் 5 வருடம்தான்.

இச்சட்டம் அமுலுக்கு வரும்போது ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள டிரஸ்டிகள் (அதாவது பரம்பரை பாத்தியமில்லாத டிரஸ்டிகள்) எல்லோரும் இச்சட்டப்படிக்கே நியமிக்கப்பட்டவர்களாகப் பாவிக்கப்படுவார்கள். அந்தந்த டிரஸ்டிகள் நியமிக்கப்பட்ட உத்தரவுகளில் கண்டபடி அவர்கள் இன்னும் எவ்வளவு காலத்திற்கு அவர்கள் டிரஸ்டிகளாக இருக்கலாமோ அதே காலத்திற்குத்தான் அவர்கள் இப்புதுச் சட்டப்படி நியமிக்கப்பட்டவர்களாவார்கள். (செக்ஷன் 44)

இவை தவிர சரிவர நிர்வாகம் செய்யப்படாத எவ்விதக் கோயிலையும் 'அறிக்கையிடப்பட்ட கோயிலா'க (Notified Temple) செய்ய கமி

ஷனருக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் அறிக்கையிடப்பட்ட கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் சம்பளம் வாங்கும் ஒரு நிர்வாக உத்தியோகஸ்தர் (Executive officer) கமிஷனரால் நியமிக்கப்படுவார். இவ்விதமான கோயில்களின்மீது பிரதேச கமிட்டிகளுக்கு அதிகாரம் போய்விடும். ஏற்கனவே பழைய சட்டப்படி அறிக்கையிடப்பட்ட கோயில்கள் இப்புதுச் சட்டப்படிக்கும் அறிக்கையிடப்பட்டவையாக ஐந்து வருடங்கள் வரை பாவிக்கப்படும்.

கோயில் டிரஸ்டிகளுடையவும்—மடாதிபதிகளுடையவும் பொதுக் கடமைகள்

ஒரு மத ஸ்தாபனத்தின் டிரஸ்டிகள் என்பதில் கோயில்களின் பரம்பரை டிரஸ்டிகளும், பரம்பரைப் பாத்தியமில்லாத டிரஸ்டிகளும், மடாதிபதிகளும் சேர்ந்தவர்களே, என்பதைக் கவனித்தோம். இவர்கள் எல்லோருக்கும் பொதுவான சில விதிகள் இருக்கின்றன. அவைகளை முதலில் கவனிப்போம்.

கோயில்கள் மடங்கள் அவைகளைச் சேர்ந்த சொத்துக்கள் கட்டளைகள் முதலியவற்றின் நிர்வாகம் எல்லாம் இச்சட்டப்படி நியமிக்கப்படும் 'கமிஷனரி'ன் பொதுவான மேற்பார்வைக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டவையே. மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள் சரிவர நிர்வாகம் செய்யப்படுகின்றனவா என்றும் அவைகளின் காரியங்களுக்காகவே அவைகளின் வருமானம் சரிவரச் செலவிடப்பட்டு வருகிறதா என்றும் பார்த்துவரும் பொறுப்பும் கமிஷனருடையதே. அவரும் மற்ற அதிகாரிகளும் எந்த மத ஸ்தாபனங்களுக்குள்ளேயும் போய், தங்கள் அதிகாரத்தையும் கடமையையும் செலுத்த உரிமை உண்டு. அப்படிச் செய்வதில் இவர்கள் தடுக்கப்பட்டால் அவ்விடத்திற்கு அதிகாரமுள்ள மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின் பேரில் போலீசாரின் உதவி கோரலாம். இச்சட்டப்படி சர்க்காராலும் கமிஷனர், டிப்டி கமிஷனர், உதவிக் கமிஷனர், பிரதேச கமிட்டி இவர்களாலும் செய்யப்படும் உத்தரவுகளின்படி நடக்கவேண்டிய கடமை கோயில் டிரஸ்டிகளுக்கும் மடாதிபதிகளுக்கும் உண்டு. இவர்கள் அந்தந்த ஸ்தாபனத்தின் சொத்துக்களை அந்த ஸ்தாபனத்தின் ஏற்பாட்டின்படியோ, வழக்கப்படியோ அதிகாரிகளின் உத்தரவுகளின்படியோ நிர்வாகம் செய்வதுடன் தம் சொந்த சொத்துக்களை ஒரு சாதாரண மனிதர் எவ்வளவு ஜாக்கிரதையுடன் நிர்வாகம் செய்வாரோ அதே ஜாக்கிரதையுடன் இவர்கள் அச்சொத்துக்களைப் பரிபாலனம் செய்ய வேண்டும். தம் தம் கோயில் அல்லது மடத்தின் நன்மைக்காகவும் தம் கடமைகளைச் செய்வதற்காகவும் அவசியமான காரியங்களைச் செய்ய இவர்களுக்கு உரிமை உண்டு; ஆனால் ஒரு டிரஸ்டியையோ, மடாதிபதியையோ பதவியை விட்டு நீக்குவதற்காக எடுத்துக் கொள் எப்படும் நடவடிக்கைகளுக்காக அவர் அக்கோயில் பணத்தையோ மடத்தின் பணத்தையோ செலவு செய்யக் கூடாது. இச்செலவுகளைக் கோயில் அல்லது மடத்தின் ஐவேஜியிலிருந்து எடுத்துக்கொள்ள உத்தரவு ஏற்பட்டால் மட்டில் அதைத் திருப்ப எடுத்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு கோயிலுக்கும், மடத்திற்கும் கீழே கண்ட விவரங்கள் அடங்கிய ஒரு ரிஜிஸ்டர் தயார் செய்து கோயில் டிரஸ்டிகளும் மடாதிபதிகளும் இச்சட்டம் அமுலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் அனுப்பவேண்டும். மடாதிபதிகள் இந்த ரிஜிஸ்ட்டரை நேரே கமிஷனருக்கு அனுப்பவேண்டும். பிரதேச கமிட்டிகளுக்குட்பட்ட டிரஸ்டிகள் பிரதேச கமிட்டி மூலமாகவும், மற்றக் கோயில் டிரஸ்டிகள் உதவிக் கமிஷனர் மூலமாகவும் இந்த ரிஜிஸ்டரைக் கமிஷனருக்கு அனுப்பவேண்டும். இச்சட்டத்திற்கு முன்பே பழைய சட்டப்படி அவ்வித ரிஜிஸ்டர்கள் அனுப்பிவிட்ட டிரஸ்டிகள் மறுபடியும் இதை அனுப்பவேண்டியதில்லை. இந்த ரிஜிஸ்டரில் இருக்கவேண்டிய விஷயங்கள் :—(1) டிரஸ்டிகளின் பெயர்; பழைய டிரஸ்டிகளின் விவரம்; பரம்பரைப் பாத்தியம் இருந்தால் அது சம்பந்தமான விதிகள் (2) ஏற்பாடு (Scheme) அல்லது வரவு செலவு திட்டத்தின் விபரம் (3) சிப்பந்திகள் ஊழியர்கள் இவர்களின் சம்பளம், வருமானம் முதலியவை. (4) கோயில் அல்லது மடத்திற்குச் சொந்தமான தங்கம், வெள்ளி, ரத்தினங்கள், பாத்திரங்கள், மற்றும் உள்ள ஜங்கம சொத்துக்கள், அவைகளின் மதிப்பு. (5) கோயில் அல்லது மடத்திற்குச் சொந்தமான மற்றச் சொத்துக்களின் விவரமும் மூலாதரவு தஸ்தவேஜிகளின் விவரமும் மற்ற தஸ்தவேஜிகளின் விவரமும் (6) விக்கிரகங்களின் விபரம் (7) கமிஷனர் கேட்கும் மற்ற விவரங்கள். இவைகள் இந்த ரிஜிஸ்டரில் அடங்கியிருக்க வேண்டும். இவ்விதம் அனுப்பாமலிருப்பது ஒரு குற்றமாகும்.

இதற்கு ஒவ்வொரு டிரஸ்டிக்கும் ரூபாய் 200 வரை அபராதம் விதிக்கப்படலாம். அனுப்ப வேண்டிய தேதிக்கு ஒரு மாதம் கடந்தும் அனுப்பாமலிருந்தால் அப்படி அனுப்பாமல் இருக்கும் ஒவ்வொரு வாரத்திற்கும் ரூபாய் 100 வீதம் அபராதம் விதிக்கப்படலாம். இந்த ரிஜிஸ்டரில் தேவையான திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கமிஷனர் உத்தரவிடலாம். அவைகளையும் செய்து இதன் மூன்று பிரதிகள் கமிஷனருக்கு அனுப்பவேண்டும். ஒன்று கமிஷனரிடம் இருக்கும்; ஒன்று பிரதேச கமிட்டி அல்லது உதவிக் கமிஷனரிடம் இருக்கும்; மூன்றுவது கோயில் டிரஸ்டிகளிடமோ மடாதிபதிகளிடமோ இருக்கும். இந்த ரிஜிஸ்டரில் ஒவ்வொரு வருடம் புதிதாகச் சேர்க்கவேண்டிய விஷயங்களைச் சேர்த்து முன் சொன்னது போலவே அனுப்பவேண்டும். இவைகளுள் எதைச் செய்யாமலிருந்தாலும் முன் சொல்லப்பட்டது போல் குற்றமாகும்.

மேலும் கோயில் டிரஸ்டிகளும் மடாதிபதிகளும் அந்தந்த ஸ்தாபனத்தின் நிர்வாகத்தைப் பற்றியும், அதன் சொத்து வருப்படி முதலியவை பற்றியும் வரவு செலவுக் கணக்குகளையும் வேறு விஷயங்களைப் பற்றிய தகவல்களையும் தமக்கு அனுப்பும்படி கமிஷனர் கேட்கலாம். கோயில்கள் சம்பந்தப்பட்ட வரையில் உதவிக் கமிஷனருக்கும், பிரதேச கமிட்டிக்கும் இந்த அதிகாரம் உண்டு. கோயில்களின் ஸ்தாவர சொத்துக்களை டிரஸ்டிகளும், மடத்தின் ஸ்தாவர சொத்துக்களை மடாதிபதியும் கமிஷனருடைய அனுமதியின்றி விற்பனை, அல்லது பரிவர்த்தனை செய்யவும் அடமானம் வைக்கவும் 5 வருடங்களுக்கு அதிகமான கெடுவுள்ள குத்தகைக்கு விடவும் கூடாது. அப்படிச் செய்தால் செல்லாது. ஆனல் விசாரணை செய்து, அக்கரையுள்ளவர்களின் ஆட்சேபணைகளைக் கேட்டு அனுமதி கொடுக்கவும், நிபந்தனைகள் ஏற்படுத்தவும் கமிஷனருக்கு அதிகாரம் உண்டு. கமிஷனரின் உத்தரவை மாற்ற வேண்டுமென்று மூன்று மாதங்களுக்குள் சர்க்காருக்கு அப்பீல் செய்யலாம். டிரஸ்டி அல்லது மடாதிபதியும் அப்பீல் செய்யலாம். அக்கரை உள்ள எவரும் அப்பீல் செய்யலாம். அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 15. 'இனம்' நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் வேறு விதிகள். இவை பின்பு விவரமாக விளக்கப்படும்.

கோயில் அல்லது மடத்தின் சொத்து அல்லது வரும்படியை எதற்காகச் செலவு செய்யலாம்.

கோயில் டிரஸ்டிகளும் மடாதிபதிகளும் அந்த ஸ்தாபனத்தின் சொத்து அல்லது வரும்படிகளைக் கீழே கண்ட விஷயங்களுக்காகச் செலவு செய்யலாம்.

(1) ஒவ்வொரு வருடமும் அனுமதிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் கண்ட விஷயங்களுக்கான செலவுகள்.

(2) அந்த ஸ்தாபனத்தால் கொடுக்கப்பட வேண்டிய கடன்கள்.

(3) கோயில் அல்லது மடத்தின் கட்டடங்களைப் பழுது பார்ப்பது, புதுப்பிப்பது இவைகளுக்கான செலவு, (வருட வருமானம் ரூ. 3000-க்கு மேற்படாத கோயில்களும் மடங்களும் 10 சதவிகிதமும் அதற்குமேல் வருமானமுள்ள கோயில்களும் மடங்களும் 25 சதவிகிதமும் குறைந்தது செலவு செய்ய வேண்டும்).

(4) கையிருப்பில் தினசரிச் செலவுக்குத் தேவையான பணம் வைத்திருக்கவேண்டும். மேற்கண்ட செலவுகளைப்பற்றி ஒவ்வொரு வருடமும் மார்ச்சு 31-உக்குள் கமிஷனருக்கோ பிரதேச கமிட்டிக்கோ 'பட்ஜெட்' அனுப்ப வேண்டும்.

இவை போகப் பாக்கி வரும்படியிலிருந்து கமிஷனர் அல்லது பிரதேசக்கமிட்டியின் அனுமதியின் பேரில்,

(5) அக்கோயில் அல்லது மடத்திற்கு வரும் சிடர்கள், யாத்ரீகர்கள், வழிபாடு செய்பவர்களின் தேக ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது சௌகரியங்களுக்கான ஏற்பாடுகளுக்குச் செலவு செய்யலாம்.

(6) அர்ச்சகர்கள், அத்தியாபகர்கள், வேத பாராயணக்காரர்கள், ஓதுவார்கள்—இவர்களுக்குப் பயிற்சி அளிக்கச் செலவு செய்யலாம்.

இச்செலவுகளும் போகக் கோயில் அல்லது மடத்தின் வரும்படியில் பாக்கி இருந்தால் டிப்டி கமிஷனரின் எழுத்து மூலமான அனுமதி பெற்று, கீழே கண்ட விஷயங்களுக்கான செலவுகளையும் செய்யலாம்.

(7) அந்த ஸ்தாபனத்தின் மதக் கோட்பாடுகளைப்பற்றி பிரசாரம் செய்வது.

(8) ஹிந்து மதம், தத்துவம், சாத்திரம் இந்தக் கோயில்களின் சிற்பக்கலை இவைகளைக் கற்க விசேஷ ஏற்பாடுகளுடன் கூடிய கல்லூரி,

பல்கலைக்கழகம், அல்லது வேறு ஸ்தாபனத்தை ஏற்படுத்திப் பராமரிப்பது.

(9) இந்து மாணவர்களுக்கு இந்துமத போதனையளிக்கும் கல்விஸ்தாபனங்களை ஏற்படுத்தி நடத்துவது.

(10) இந்திய மொழிகளில், (ஸம்ஸ்கிருதம் உள்பட) பயிற்சி அளிப்பது.

(11) இந்திய சிற்பக்கலைகளையும் மற்றக்கலைகளையும் வளர்ப்பது.

(12) இந்து அனாதைக் குழந்தைகளுக்கு அனாதை இல்லங்கள் ஏற்படுத்துவது.

(13) குஷ்டரோகத்தால் பீடிக்கப்படும் இந்துக்களுக்கு சம்ரட்சணைச் சாலைகள் ஏற்படுத்துவது.

(14) இந்து ஏழைகளுக்கு ஏழை விடுதிகள் ஏற்படுத்துவது.

(15) இந்துக்களுக்காக ஆஸ்பத்திரிகளையும் மருந்துச்சாலைகளையும் ஏற்படுத்துவது. (செக்ஷன் 59) மேற்கண்ட விஷயங்களுக்காக டிப்டி கமிஷனர் செய்யும் உத்தரவுகளின் மீதும் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம்.

வரவு செலவுத் திட்டம். ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாத முடிவுக்குள் ஒவ்வொரு மதஸ்தாபனத்தின் டிரஸ்டியும் அடுத்த வருஷத்தில் உத்தேசமாய் வரக்கூடிய வரும்படியையும் செலவு செய்யவேண்டிய தொகைகளையும் கண்டு ஒரு 'பட்ஜெட்' என்ற வரவு செலவுத் திட்டம் தயார் செய்து அனுப்ப வேண்டும். பிரதேசக் கமிட்டிக்குட்பட்ட டிரஸ்டி அதற்கும் மற்றவர்கள் கமிஷனருக்கும் இதை அனுப்பவேண்டும். இத்திட்டத்தை மாற்ற அவர்களுக்கு அதிகாரமுண்டு. பிரதேச கமிட்டி மாற்றினால் டிரஸ்டிகள் டிப்டி கமிஷனருக்கு ஒரு மாதத்திற்குள் அப்பீல் செய்யலாம்.

டிரஸ்டிகள் சரிவரக் கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். வருடம் வருமானம் ரூ. 60000-க்குக் குறையாத மதஸ்தாபனங்களின் கணக்குகள் அன்றன்றாடம் தணிக்கை (ஆடிட்) செய்யப்படும். மற்ற ஸ்தாபனங்களின் கணக்குகள் வருடத்திற்கு ஒரு முறை தணிக்கை செய்யப்படும். டிரஸ்டிகள் செய்த சட்ட விரோதமான செலவுகளையும் அவர்களுடைய அசட்டையால் ஏற்பட்ட நஷ்டங்களுக்கும் கணக்கெடுக்கப்பட்டு கமிஷனருக்கு அனுப்பப்படும். கமிஷனர் அதை ஆராய்ந்து அதற்காக எவ்வளவு தொகைகள் 'டிரஸ்டி' தம் கையைவிட்டு, தம் சொந்த ஐவேஜியிலிருந்து கட்ட வேண்டுமென்ற 'சர்சார்ஜ்' உத்தரவு பிறப்பிக்கலாம். அது நில கிஸ்தியைப் போல் டிரஸ்டியிடமிருந்து கலெக்டரால் வசூல் செய்யப்படும். ஆனால் சர்சார்ஜ் உத்தரவை மாற்ற, 30 நாட்களுக்குள், அதனால் பாதிக்கப்பட்ட டிரஸ்டி கோர்ட்டுக்கும் மனுப் போடலாம். அல்லது சர்க்காருக்கும் அப்பீல் செய்து கொள்ளலாம். இரண்டில் ஒன்றுதான் செய்யலாம்.

கோயில் ஊழியர்கள் மீது நடவடிக்கைகள்

ஒரு கோயிலின் ஊழியர்கள் சிப்பந்திகள் முதலிய யாவரும் அக்கோயிலின் டிரஸ்டிகளுக்குட் பட்டவர்களே. இவர்கள் பரம்பரைப் பாத்தியமுள்ளவர்களாக இருந்தாலும் சரி, அப்படிக்கில்லாமல் இருந்தாலும் சரி எல்லோரும் டிரஸ்டிகளின் உத்தரவுப்படி நடக்கக் கடமைப்பட்டவர்களே. கோயில் ஊழியர்கள் அல்லது சிப்பந்திகள் கோயில் சொத்துக்கள் விஷயமாய் நம்பிக்கைத் துரோகமாக நடந்து கொண்டாலும், வேலை செய்யக் கடைப்படாமலிருந்தாலும், மேல் அதிகாரிகளின் உத்தரவுகளை மீறினாலும், தம் அலுவல்களைக் கவனிக்காமல் அலட்சியமாக இருந்தாலும் தவறான முறையில் நடந்துகொண்டாலும், வேறு தகுந்த காரணங்கள் இருந்தாலும் இவர்களைத் தள்ளி விடவும் நீக்கவும், சஸ்பெண்டு செய்யவும் இவர்களுக்கு அபராதம் விதிக்கவும் டிரஸ்டிகளுக்கு அதிகாரமுண்டு. ஆனால் விதிகளில் ஏற்பட்டிருக்கும் முறைப்படி விசாரணை முதலிய செய்துதான் டிரஸ்டிகள் மேற்சொன்னபடி உத்தரவுகள் செய்யலாம்.

டிரஸ்டியின் உத்தரவின்பேரில், ஒரு மாதத்திற்குள் டிப்டி கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். டிப்டி கமிஷனருடைய அப்பீல் உத்தரவின் பேரில் ஒரு மாதத்திற்குள் பரம்பரைப் பாத்தியமுள்ள ஊழியர்கள் மட்டில் கமிஷனருக்கு இரண்டாவது அப்பீல் செய்யலாம். பரம்பரைப் பாத்தியமில்லாதவர்களுக்கு டிப்டி கமிஷனர் செய்த உத்தரவே முடிவானது.

கோயில் டிரஸ்டிகள் மீது நடவடிக்கைகள்

பிரதேசக் கமிட்டிகளுக்குட்பட்ட கோயில் டிரஸ்டிகளை டிப்டி கமிஷனரும், மற்றக் கோயில்களின் டிரஸ்டிகளைக் கமிஷனரும், கீழே கண்ட காரணங்களுக்காக நீக்கிவிடவும் தள்ளிவிடவும், சிறிது காலத்திற்கு நீக்கி வைக்கவும் (சஸ்பெண்டு செய்யவும்) அதிகாரமுண்டு. அந்த டிரஸ்டிகள் பரம்பரைப் பாத்தியமுள்ளவர்களாக் இருந்தாலும் சரி,

தமிழ்நாடு ஆவணக காப்பக நூலகம் 187712 600 008

இல்லாவிட்டாலும் சரி மேற்கண்ட அதிகாரம் உண்டு. டிரஸ்டிகள் மீது மேற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப் போதுமான காரணங்களாவன :—(1) டிரஸ்டிகள் பட்ஜெட், கணக்கு, ரிபோர்ட்டுகள் அல்லது விவரக் கணக்குகளைப் பிடிவாதமாய் அனுப்பத் தவறிக்கொண்டே வருவது. (2) இச்சட்டப்படிக்கான அதிகாரிகளால் செய்யப்படும் உத்தரவுகளுக்கு வேணுமென்று கீழ்ப்படியாதிருப்பது. (3) கோயில் சொத்து சம்பந்தமாய்த் தீங்கு செய்வது, தவறிழைப்பது, நம்பிக்கைத் துரோகம் செய்வது, அல்லது கடமையைச் செய்யாதிருப்பது. (4) கோயில் சொத்துக்களைத் துர்விநியோகம் செய்வது; சொந்த உபயோகப்படுத்துவது. (5) சித்த சுவாதீனத்தை இழப்பது; கோயில் அலுவல்களைக் கவனிக்க முடியாத மனக் கோளாறோ, உடம்புக் கோளாறோ வியாதியோ இருப்பது.

இவ்விஷயங்களைக் குறித்து முதலில் குற்றச்சாட்டு செய்து, ஆட்சேபணைகளைச் சொல்லிக் கொள்ளச் சந்தர்ப்பம் அளித்த பிறகே முடிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

டிப்டி கமிஷனர் செய்யும் அசல் உத்தரவுகளின்மீது ஒரு மாதத்திற்குள் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். கமிஷனர் செய்த அசல் உத்தரவுகளின் மீது ஒரு மாதத்திற்குள் சர்க்காருக்கு அப்பீல் செய்யலாம். (செக்ஷன் 45) அப்பீல் மனுக்களுக்கு ஸ்டாம்புக் கட்டணம் ரூபாய் 25.

தண்டனை அடைந்த டிரஸ்டிகளும் இன்ஸால்வெண்டாக்கப்பட்ட டிரஸ்டிகளும் பதவியை இழப்பார்கள்.

பரம்பரைப் பாத்தியமில்லாத டிரஸ்டி ஒருவர் கிரிமினல் கோர்ட்டால் தீவாந்தர சிட்சை அல்லது ஆறு மாதத்துக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் அவர் டிரஸ்டி பதவியை இழப்பார். ஆனால் ஒழுக்கக்கேடு சம்பந்தமில்லாத குற்றத்திற்காகத் தண்டனை அடைந்திருந்தாலும், தண்டனை ஆறு மாதத்திற்குக் குறைக்கப்பட்டு விட்டாலும் குற்றம் மன்னிக்கப்பட்டாலும் சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப் பட்டாலும் இவ்விதி கிடையாது. அதே போல் ஒரு டிரஸ்டி தாமே கடன் கொடுக்கச் சக்தியற்றவர் என்று 'இன்ஸால்வெண்டு' மனுக் கொடுத்தாலும், கோர்ட்டால் இன்ஸால்வெண்டாக்கப்பட்டாலும் டிரஸ்டி பதவியை இழப்பார். இது விஷயமாகச் சந்தேகம் அல்லது தகராறுகள் இருந்தால் டிப்டி கமிஷனரே முடிவு செய்வார். மேற்கண்ட காரணங்களுக்காக ஒரு பரம்பரைப் பாத்தியமுள்ள டிரஸ்டியையும் நீக்கிவிட டிப்டி கமிஷனருக்கு அதிகாரமுண்டு. டிப்டி கமிஷனருடைய அவ்வித உத்தரவின் பேரில் ஒரு மாதத்திற்குள் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். அப்பீல் மனுவுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 25. பரம்பரை டிரஸ்டியின் பதவி காலியானதும் அடுத்த வார்சு டிரஸ்டி ஆவார். அடுத்த வார்சு மைனராகயிருந்தாலும், தகுதியுள்ள கார்டியன் இல்லாதிருந்தாலும், உடல் அல்லது மனக் கோளாறினால் அடுத்த வார்சு டிரஸ்டியாக இருக்கத் தகுதியற்றவராக இருந்தாலும், வார்சு யார் என்று தகராறுகள் இருந்தாலும் டிப்டி கமிஷனரே தாற்காலிகமாக வேறு ஒருவரைப் பரம்பரை டிரஸ்டியின் அலுவல்களைப் பார்க்க நியமிப்பார். இவ்வுத்தரவின் பேரிலும் கமிஷனருக்கு ஒரு மாதத்திற்குள் அப்பீல் செய்யலாம். இதற்கும் ஸ்டாம்பு கட்டணம் ரூ. 25 தான்.

மடாதிபதிகள் மீது நடவடிக்கைகள்

சில காரணங்கள் இருந்தால் ஒரு மடாதிபதியை அப்பதவியை விட்டு நீக்க வேண்டுமென்று கோர்ட்டில் தாவா செய்யலாம். ஆனால் இவ்விதமான தாவாக்களைக் கமிஷனரோ, அல்லது அம்மடத்தில் அக்கரை அல்லது பற்றுள்ள இரண்டு அல்லது அதிகமான நபர்கள் சேர்ந்து கமிஷனருக்கு மனுப் போட்டு தாவா செய்யக் கமிஷனருடைய எழுத்து மூலமான சம்மதத்தைப் பெற்றும் அவர்கள் கோர்ட்டில் தாவா செய்யலாம். கமிஷனர் சம்மதம் கொடுக்க மறுத்தால், அதன் பேரில் மூன்று மாதங்களுக்குள் சர்க்காருக்கு அப்பீல் செய்யலாம். அப்பீலில் கமிஷனர் சம்மதம் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. கமிஷனரிடம் சம்மதம் கோரும் மனுவுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 10. அவர் சம்மதம் கொடுக்க மறுத்தால் அதன் பேரில் சர்க்காருக்குச் செய்யும் அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 20. கமிஷனரோ, அவர் சம்மதம் பெற்ற நபர்களோ சிவில் கோர்ட்டில் செய்யும் தாவாவுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 50.

எந்த எந்தக் காரணங்கள் இருந்தால்தான் ஒரு மடாதிபதியைப் பதவியை விட்டு நீக்கச் சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாமென்பதைக் கவனிப்போம்.

அதாவது அம்மடாதிபதி (1) புத்தி சுவாதீனமில்லாமலிருந்தாலும் (2) மடாதிபதியாக

இருக்க லாயக்கில்லாமல் செய்யும் தேக அசௌக்கியத்தாலோ புத்தி தடுமாற்றத்தாலோ அவர் பீடிக்கப்பட்டிருந்தாலும் (3) அவர் இந்து மதத்தையே விட்டுவிட்டாலும் அல்லது அம்மடத்தின் அடிப்படைக் கொள்கைகளைத் தழுவுவதிலிருந்து நழுவி விட்டாலும் (4) ஒழுக்கக் கேடான நடத்தையைக் காட்டும் ஒரு குற்றத்திற்காக அவர் தண்டனை யடைந்திருந்தாலும் (5) மடத்தின் சொத்துக்களைக் குறித்து அவர் நம்பிக்கைத் துரோகம் செய்திருந்தாலும் (6) இச்சட்டப்படிக்கோ வேறு சட்டங்களின்படிக்கோ அவருடைய கடமைகளையும் அலுவல்களையும் செய்வதில் அவர் பிடிவாதமாகவும் வேண்டுமென்றும் தவறிக்கொண்டே வந்தாலும் தான் — அவரைப் பதவியை விட்டு நீக்க முன் சொன்னபடி கோர்ட்டில் தாவா செய்யலாம்.

மடங்களுக்கு மானேஜர்.

மடத்தின் லௌகிக விஷயங்களைக் கவனிக்க ஒரு 'மானேஜர்' நியமிக்கவேண்டுமென்று கமிஷனர் உத்தரவிடலாம். அதன்படி மடாதிபதியே தகுதியுள்ள ஒரு மானேஜர் நியமித்து அவர் பெயரைக் கமிஷனருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மடாதிபதி நியமிக்காவிட்டால் கமிஷனரே ஒரு மானேஜர் நியமிக்கலாம்.

"ஸ்கீம்" அல்லது ஏற்பாடு

ஒரு மதஸ்தாபனம் சரிவர நிர்வாகம் செய்யப்படுவதற்கான ஏற்பாட்டை (Scheme) நிர்ணயம் செய்யவேண்டுமென்று டிப்டிகமிஷனருக்குத் தோன்றினல் அவர் விதிகளின்படி டிரஸ்டிகளையும், பிரதேசகமிட்டிக்கு அதிகாரமிருந்தால் அதையும் கலந்து கொண்டு அக்கோயில், கட்டளை அல்லது மடத்திற்கு ஒரு "ஏற்பாடு" அல்லது "ஸ்கீம்" நிர்ணயம் செய்யலாம். அல்லது எந்தக் கோயில் கட்டளை அல்லது மடத்திலும் பற்றுள்ள ஐந்து நபர்கள் அதற்கு ஒரு 'ஸ்கீம்' நிர்ணயம் செய்யவேண்டுமென்று டிப்டிகமிஷனருக்கு மனுக்கொடுக்கலாம். இவ்வித 'ஸ்கீம்' மனுக்களுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 50. அவ்விதம் நிர்ணயம் செய்யப்படும் ஸ்கீமில் ஒரு கோயிலுக்கு அப்போது இருந்து வரும் டிரஸ்டிகளை, இவர்கள் பரம்பரைப் பாத்தியமுள்ள டிரஸ்டிகளாக இருந்தாலும் சரி, பரம்பரைப் பாத்தியமில்லாத டிரஸ்டிகளாக இருந்தாலும் சரி, அவர்களை நீக்கி வேறு டிரஸ்டிகள் நியமித்தும் ஸ்கீம் ஏற்படுத்த டிப்டிகமிஷனருக்கு அதிகாரமுண்டு. 'ஸ்கீமில்' டிரஸ்டிகளின் அதிகாரங்களை ஒரு வரம்புக்குட் படுத்தியும், நிர்வாக உத்தியோகஸ்தர் நியமிக்கவும் உத்தரவிடலாம்.

மடங்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் 'ஸ்கீம்'களில் மடத்தின் நிர்வாகத்தில் கலந்து கொள்ளவும் மடாதிபதிக்கு உதவி செய்யவும் ஒரு தனி நபரையோ பல நபர்கள் கொண்ட ஒரு உதவிச் சபையையோ ஏற்படுத்தலாம். நிர்வாக உத்தியோகஸ்தரையும் நியமிக்கலாம். மடாதிபதியின் அதிகாரங்களையும் ஒரு வரம்புக்குட் படுத்தலாம்.

'ஸ்கீம்' நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும் போதே அந்தக் கோயில் அல்லது மடத்தின் நிர்வாகத்திற்குத் தாற்காலிக ஏற்பாடு செய்யவும் டிப்டி கமிஷனருக்கு அதிகாரம் உண்டு. புதிய ஸ்கீம்களிலும் பழைய சட்டப்படி ஏற்பட்ட ஸ்கீம்களிலும் மாறுதல்கள் செய்யவும் டிப்டி கமிஷனருக்கு அதிகார முண்டு,

'ஸ்கீம்' ஏற்படுத்திய டிப்டிகமிஷனரின் உத்தரவின் பேரில் ஒரு மாதத்திற்குள் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். அப்பீல் மனுவுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 25.

கமிஷனரின் உத்தரவின் பேரில், 90 நாட்களுக்குள் அதைமாற்ற, சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். இவ்விதமான தாவாக்களுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூ. 50. மேலும் இத்தாவாக்கள் அந்த ஸ்தாபனம் இருக்கும் இடத்திற்கு அதிகாரமுள்ள சப்கோர்ட்டிலோ, அல்லது சப்கோர்ட் இல்லாத இடங்களில் ஜில்லா கோர்ட்டிலோ, சென்னையில் சிட்டி சிவில் கோர்டிலோதான் தாகல் செய்யப்பட வேண்டும்.

கோர்ட்டின் தீர்ப்பின் பேரில் 90 நாட்களுக்குள் ஹைகோர்ட்டுக்கும் அப்பீல் உண்டு. இதற்கும் ஸ்டாம்புக் கட்டணம் ரூ. 50 தான்.

வழக்குகள்

ஒரு கோயில் அல்லது மடம் அல்லது அவை சம்பந்தமான கட்டளை—இவைகளின் நிர்வாகம் பற்றியோ, அல்லது வேறு விஷயங்களைப் பற்றியோ யார் யார் எந்த அதிகாரியிடம் அல்லது எந்தக் கோர்ட்டில் எவ்விதம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாமென்று இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவோ, அவ்விஷயங்களைக் குறித்து, இச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் முறைப்படிதான் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியும். அப்படிக்கில்லாமல் எடுத்தவுடன் சிவில் கோர்ட்டில் அது விஷயமாய்த் தாவா செய்ய முடியாது.

கீழே கண்ட விஷயங்களைப்பற்றி உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் இனி நீங்கள் அது விஷயத்தை நிர்ணயம் செய்ய சிவில் கோர்ட்டுகளில் எடுத்தவுடன் தாவா செய்யமுடியாது. இச்சட்டப்படிக்கு நியமிக்கப்பட்டுள்ள 'டிப்டி கமிஷனரிடம் தான் மனுக்கொடுக்கவேண்டும். மனுவுக்குக் கட்டணம் ரூ. 15. அவ்விஷயங்கள் எவை என்று கவனிப்போம். (1) ஒரு ஸ்தாபனம் இச்சட்டத்திற்குட்பட்ட 'மதஸ்தாபனமா' அல்லவா (2) ஒரு டிரஸ்டி பரம்பரைப் பாத்தியமுள்ளவரா அல்லவா (3) ஒரு சொத்தோ நிதியோ ஒரு மதஸ்தாபனத்திற்குச் சொந்தமானதா, அல்லவா (4) ஒரு சொத்தோ நிதியோ ஒரு கட்டளைக்குச் சொந்தமானதா (5) வழக்கப்படிக்கோ வேறு விதமாகவோ ஒருவருக்கு ஒரு கோயில் அல்லது மடத்தில் உரிமை மரியாதை அல்லது வரும்படிகள் கிடைக்கவேண்டுமா; எந்த விஷயமாகவும், ஒரு கோயில் அல்லது மடத்தின் தொன்றுதொட்ட வழக்கம் என்ன (6) ஒரு ஸ்தாபனம் மதசம்பந்தமாகவும் லௌகிக சம்பந்தமாகவும் இருந்து அதற்குச் சொத்துக்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும்; அல்லது மத சம்பந்தமும் லௌகிக சம்பந்தமுமுள்ள ஒரு தர்மத்திற்காகச் சொத்துக்கள் வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது ஒரு சொத்து அல்லது தொகை இரண்டு விஷயங்களுக்கும் உபயோகப்பட்டு வந்தாலும் இவைகளில் மத சம்பந்தமாக எவ்வளவு சொத்து அல்லது தொகைகள் ஒதுக்கப்படவேண்டும்—என்ற இப்பிரச்னைகளைப் பற்றி உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை டிப்டிகமிஷனரிடம் முதலில் மனுப்போட்டு நடவடிக்கை நடத்தலாமே ஒழிய, 'சிவில் கோர்ட்டுகளில் முதலில் இவ்விஷயங்களைப் பற்றித் தாவா செய்ய முடியாது'. இவ்வித வழக்குகளில் டிப்டி கமிஷனர் செய்யும் உத்தரவின் பேரில் ஒரு மாதத்திற்குள் கமிஷனருக்கு அப்பீல் செய்யலாம். கமிஷனரின் உத்தரவின் பேரில் 90 நாட்களுக்குள் அத்தீர்ப்பு சரி அல்ல என்று சிவில் கோர்ட்டில் தாவா செய்யலாம். சிவில் கோர்ட் தீர்ப்பின் பேரிலும் 90 தினங்களுக்குள் ஹைகோர்டுக்கு அப்பீல் செய்யலாம், 'சிவில் கோர்ட்' என்றால் அந்த ஸ்தாபனம் இருக்கும் இடத்திற்கு அதிகாரமுள்ள சப்கோர்ட்; சப் கோர்ட் இல்லாவிட்டால் ஜில்லா கோர்ட்; சென்னையில் சிட்டி சிவில் கோர்ட் என்றுதான் அர்த்தம்.

குற்றங்களும் தண்டனையும்

ஒரு மதஸ்தாபனத்தின் டிரஸ்டியோ, நிர்வாக உத்தியோகஸ்தரோ, அவர்களின் ஏஜண்டோ, டிரஸ்டிகளிடம் வேலை பார்க்கும் சிப்பந்திகளோ—(1) அந்த ஸ்தாபனத்திற்கான ரிஜிஸ்டர் செக்ஷன் 25, 26ன் படி தயார் செய்யவும் அதில் ஏற்படும் வருடாந்தரமாறுதல்கள் அனுப்பவும் தவறினாலும் மறுத்தாலும் அசட்டையாக இருந்தாலும் (2) அந்த ஸ்தாபனத்தின் நிர்வாகம், அதன் சொத்து, வரும்படி, பணம் இவைகளைப் பற்றிக் கணக்குகளும், ரிபோர்ட்டுகளும், ரிடர்ன்களும், அதிகாரிகளால் குறிப்பிடப்படும் கெடுவுக்குள் அனுப்பத்தவறினாலும் மறுத்தாலும், அசட்டையாக இருந்தாலும் (3) இச்சட்ட அதிகாரிகள் அந்த ஸ்தாபனத்தின் ஸ்தாவரஜங்கம சொத்துக்களையோ, தஸ்தவேஜுகளையோ, கடிதப்போக்குவரத்தையோ, பிளான், அல்லது கணக்குகளையோ, வேறு விதமான தஸ்தவேஜுகளையோ பார்வையிடுவதைத் தடுத்தாலும்; அவைகளைச் சோதனைக்குட்படுத்தத் தவறினாலும் அசட்டையாக இருந்தாலும்— இவர்கள் குற்றம் செய்பவர்களாவார்கள். ரூபாய் 200 வரை அபராதம் விதிக்கப்படலாம். மேற்கண்ட தவறுதல்கள் ஒரு மாதத்திற்கு மேற்பட்டும் நீடித்திருந்தால் அப்படி தவறுதல் நீடிக்கும் ஒவ்வொரு வாரத்திற்கும் ரூ. 100 வரை அபராதம் விதிக்கப்படலாம். இவ்வித அபராதத்தை டிரஸ்டியோ, நிர்வாக உத்தியோகஸ்தரோ, மடாதிபதியோ தம் கையை விட்டுக் கொடுக்கவேண்டுமே ஒழிய அந்த ஸ்தாபனத்தின் பணத்தை இதற்காக எடுக்கக்கூடாது. ஆனால் இவை பற்றி கமிஷனர் எழுத்து மூலம் வழக்கு (கம்ப்ளெயிண்ட்)க் கொடுத்தால்தான் கோர்ட்டில் ஏற்றுக்கொள்ளப்படும். முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்கள் தான் இவ்விதவழக்குகளை விசாரிக்கலாம். ஆனால் குற்றம் செய்தவரிடம் ரூ. 1000 க்கு அதிகப்படாத தொகையை வாங்கிக் கொண்டு கிரிமினில் கோர்ட்டில் பிராது கொடுக்காமல் ராஜி செய்து கொள்ளவும் கமிஷனருக்கு அதிகாரமுண்டு.

குறிப்பு:—இச்சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பெரும்படியாக மேலே விளக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு விஷயமும் நுட்பமாயும் விவரமாயும் அடுத்து வரும் இதழ்களில் விமர்சனம் செய்யப்படும். இச்சட்ட விதிகளும் அவ்வப்பொழுது கொடுக்கப்பட்டு வரும்.

தேர்தல் (எலெக்ஷன்) சம்பந்தமான புதிய சட்டங்கள்

[சென்ற மாத இதழில் 1950ஆம் வருடத்திய ஜனப் பிரதிநிதிச் சட்டத்தை ஒட்டி ஜனாதிபதி அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சென்னை பார்லிமெண்ட் சட்ட சபைத் தொகுதி நிர்ணய உத்தரவின் விவரம் கொடுக்கப்பட்டது. மேற்படி உத்தரவை பார்லிமெண்டுக்கு சமர்ப்பித்த 21 நாட்களுக்குள் அதில் மாறுதல்கள் செய்ய பார்லிமெண்ட்டுக்கு அதிகாரம் உண்டென்பதையும் கவனித்தோம். அதை அனுசரித்து ஜனாதிபதி அவர்களின் உத்தரவில் இப்பொழுது பார்லிமெண்ட் சிற்சில மாறுதல்கள் செய்திருக்கின்றது. முடிவாகப் பார்லிமெண்டால் திருத்தி அங்கீகரிக்கப்பட்ட தொகுதி விவரம் சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில், 11—9—1951 தேதி சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் ஜில்லாக்கள் சம்பந்தப்பட்டவரையில் பார்லிமெண்ட்டால் முடிவாக நிர்ணயம் செய்யப்பட்ட தொகுதிகளும் ஒவ்வொரு தொகுதியும் தேர்ந்தெடுக்க வேண்டிய அங்கத்தினர் எண்ணிக்கையும் கீழே காணப்பட்டிருக்கிறது. * இந்த அடையாளம் போடப்பட்டிருக்கும் தொகுதிகள் சம்பந்தமாகத்தான் பார்லிமெண்ட் சபையால் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சென்ற மாத "வக்கீல்" இதழில் பிரசுரம் செய்யப்பட்ட ஜனாதிபதி அவர்களின் தொகுதி நிர்ணய உத்தரவில் பார்லிமெண்ட் தொகுதிகளில் சென்னை சிடி, செங்கல்பட்டு, ஈரோடு தொகுதிகளில் மட்டில் பார்லிமெண்டால் மாறுதல்கள் செய்யப்பட்டிருப்பதையும்; சென்னை சட்ட சபைத் தொகுதிகளில் சென்னை சிடி தொகுதிகளும் தஞ்சை ஜில்லா தொகுதிகளும் பார்லிமெண்டால் மாற்றி அமைக்கப்பட்டிருப்பதையும் கவனிக்கவும். சென்ற மாத இதழின் தொடர்ச்சியாக ராமனாதபுரம், திருநெல்வேலி, நீலகிரி ஜில்லாக்களின் சென்னை சட்ட சபைத் தொகுதிகளின் விவரமும் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றது.]

பார்லிமெண்டால் திருத்தி முடிவாக நிர்ணயம் செய்யப்பட்ட தொகுதிகள் விவரம். (தமிழ் ஜில்லாக்கள் சம்பந்தப்பட்டவரை)

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
பார்லிமெண்ட் சபை (House of the people) தொகுதிகள்		
* சென்னை	1	..
* திருவள்ளூர்	2	1
செங்கல்பட்டு	1	..
காஞ்சிபுரம்	1	..
வேலூர்	2	1
வந்தவாசி	1	..
கிருஷ்ணகிரி	1	..
தர்மபுரி	1	..
சேலம்	1	..
* ஈரோடு	2	1
திருச்சங்கோடு	1	..
திருப்பூர்	1	..
பொள்ளாச்சி	1	..
கோயமுத்தூர்	1	..
புதுக்கோட்டை	1	..
பெரம்பலூர்	1	..
திருச்சிராப்பள்ளி	1	..
தஞ்சாவூர்	1	..
கும்பகோணம்	1	..
மாயூரம்	2	1
கடலூர்	2	1
திண்டிவனம்	2	1
திருநெல்வேலி	1	..
ஸ்ரீவைகுண்டம்	1	..
சங்கரநயினார்கோயில்	1	..
அருப்புக்கோட்டை	1	..
ராமனாதபுரம்	1	..

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
ஸ்ரீவில்லிபுத்தூர்	1	..
மதுரை	2	1
பெரியகுளம்	1	..
திண்டுக்கல்	1	..

சென்னை சட்ட சபை தொகுதிகள்

சென்னை சிடி

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
வண்ணாரப்பேட்டை	1	..
ஹார்பர்	1	..
* சூளை	1	..
* பெரம்பூர்	1	..
* ஆயிரம் விளக்கு	2	1
திருவல்லிக்கேணி	1	..
மைலாப்பூர்	1	..

செங்கல்பட்டு ஜில்லா

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
பொன்னேரி	2	1
திருவள்ளூர்	2	1
சைதாப்பேட்டை	2	1
ஸ்ரீபெரும்பூதூர்	1	..
திருப்போரூர்	1	..
செங்கல்பட்டு	1	..
மதுராந்தகம்	2	1
உத்திரமேரூர்	1	..
காஞ்சீபுரம்	1	..

வடஆற்காடு ஜில்லா

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
குடியாத்தம்	2	1
திருப்பத்தூர்	1	..
வாணியம்பாடி	1	..
வேலூர்	2	1
அரக்கோணம்	1	..
ஷோலிங்கர்	1	..
ராணிப்பேட்டை	1	..
ஆற்காடு	1	..
வந்தவாசி	2	1
செய்யார்	1	..
திருவண்ணாமலை	2	1
செங்கம்	1	..
கலசப்பாக்கம்	1	..
போளூர்	1	..
ஆரணி	1	..

சேலம் ஜில்லா

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
நாமக்கல்	2	1
பரமத்தி	1	..
திருச்சங்கோடு	2	1
இடப்பாடி	1	..
ராசிபுரம்	1	..
ஆத்தூர்	1	..
தலவாசல்	1	..
சேலம் டவுன்	1	..
சேலம் ரூரல்	1	..
வலப்பாடி	1	..
ஹரூர்	2	1
ஓமலூர்	1	..
மெச்சேரி	1	..
தர்மபுரி	1	..
பெண்ணகரம்	1	..
கிருஷ்ணகிரி	1	..
உத்தனப்பள்ளி	1	..
ஹோசூர்	1	..

கோயமுத்தூர் ஜில்லா

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
கொள்ளேகாலம்	1	..
பவானி	1	..
கோபிசெட்டிபாளயம்	1	..
நம்பியூர்	2	1
மேட்டுப்பாளயம்	1	..
தொண்டமுத்தூர்	1	..
கோயமுத்தூர்	1	..
மதுக்கரை	1	..
பொள்ளாச்சி	2	1
கோயில்பாளயம்	1	..
உடுமலைப்பேட்டை	1	..
தாராபுரம்	1	..
காங்கயம்	1	..
கொடுமுடி	1	..
ஈரோடு	1	..
ஊத்துக்குழி	1	..
திருப்பூர்	2	1

தென் ஆற்காடு ஜில்லா

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
மேலமலயனூர்	1	..
செஞ்சி	1	..
திண்டிவனம்	2	1
விக்கிரவாண்டி	1	..
விழுப்புரம்	1	..
திருக்கோயிலூர்	2	1
உளுந்தூர்பேட்டை	1	..
கள்ளக்குருச்சி	2	1
விருத்தாசலம்	2	1

தொகுதியின் பெயர்	மொத்த ஸ்தானங்கள்	ஷெட்யூல் ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள்
பண்ருட்டி	1	..
கூடலூர்	2	1
புவனகிரி	1	..
சிதம்பரம்	2	1
தஞ்சாவூர் ஜில்லா		
அரந்தாங்கி	1	..
அதிராம்பட்டணம்	1	..
பட்டுக்கோட்டை	1	..
*தஞ்சாவூர்	2	1
*பாபநாசம்	1	..
*சாலியமங்கலம்	1	..
கும்பகோணம்	1	..
ஆடுதுரை	1	..
மாயூரம்	2	1
சீர்காழி	1	..
நன்னிலம்	2	1
மன்னார்குடி	2	1
நீடாமங்கலம்	1	..
நாகப்பட்டணம்	2	1
திருச்சிராப்பள்ளி ஜில்லா		
புதுக்கோட்டை	1	..
திருமயம்	2	1
அறவக்குறிச்சி	1	..
கரூர்	2	1
மணப்பாரை	1	..
திருச்சிராப்பள்ளி	1	..
திருச்சிராப்பள்ளி - வடக்கு	1	..
ஸ்ரீரெங்கம்	1	..
முசிரி	1	..
துறையூர்	1	..
மணச்சநல்லூர்	1	..
லால்குடி	1	..
பெரம்பலூர்	2	1
அரியலூர்	1	..
ஜெயங்கொண்டம்	2	1
மதுரை ஜில்லா		
பழநி	1	..
ஒட்டன்சத்திரம்	1	..
ஆத்தூர்	1	..
திண்டுக்கல்	1	..
வேடசந்தூர்	1	..
வட மதுரை	1	..
மேலூர்	2	1
மதுரை - வடக்கு	1	..
மதுரை - தெற்கு	1	..
நிலக்கோட்டை	2	1
பெரியகுளம்	2	1
உத்தமபாளயம்	1	..
கம்பம்	1	..
சேடப்பட்டி	1	..
திருமங்கலம்	1	..
ராமநாதபுரம் ஜில்லா		
ஸ்ரீவில்லிபுத்தூர்	2	1
எதிர்கோட்டை	1	..
சாத்தூர்	1	..
விருதுநகர்	1	..
அருப்புக்கோட்டை	1	..
முதுகுளத்தூர்	3	1
பரமக்குடி	1	..
மானமதுரை	1	..
சிவகெங்கை	1	..
திருப்பத்தூர்	1	..
காரைக்குடி	1	..
திருவாடானை	1	..
ராமநாதபுரம்	1	..
திருநெல்வேலி ஜில்லா		
பழவூர்	1	..
நாங்குனேரி	1	..
சேர்மாதேவி	1	..
அம்பாசமுத்திரம்	1	..
ஆலங்குளம்	1	..
தென்காசி	1	..
சங்கரநயினார்கோயில்	2	1
திருநெல்வேலி	2	1
தூத்துக்குடி	1	..
திருச்செந்தூர்	2	1
சாத்தங்குளம்	1	..
விளாத்திகுளம்	1	..
கோயில்பட்டி	1	..
கடம்பூர்	1	..
நீலகிரி ஜில்லா		
நீலகிரி	2	1

(சென்னை சட்டசபை தொகுதிகள்—
சென்ற மாத இதழ் தொடர்ச்சி)

ராமநாதபுரம் ஜில்லா

ஸ்ரீ வில்லி புத்தூர்	ஸ்ரீ வில்லி புத்தூர் தாலுகா; (மல்லி பிர்கா நீங்கலாக).	2	1	. .
எதிர்க் கோட்டை	மல்லி, சால்வார்பட்டி, எதிர்க்கோட்டை பிர்காக்கள்.	1	. .	. .
சாத்தூர்	சாத்தூர், சிவகாசி பிர்காக்கள்.	1	. .	. .
விருது நகர்	விருது நகர், கரைப்பட்டி பிர்காக்கள்.	1	. .	. .
அறுப்புக் கோட்டை	அறுப்புக்கோட்டை மண்டபசலி பிர்காக்கள்.	1	. .	. .
முதுகுளத்தூர்	முதுகுளத்தூர் தாலுகா, திருச்சுழி, நரிக்குடி, புல்வாய்க்கரை, பார்த்திபனூர் பிர்காக்கள்.	3	1	. .
பரமக்குடி	பரமக்குடி தாலுகா (இளயான்குடி, பார்த்திபனூர் பிர்காக்கள் நீங்கலாக).	1	. .	. .
மானாமதுரை	இளயான்குடி பிர்கா, திருபுவனம், திருப்பச்சட்டி, மானாமதுரை பிர்காக்கள்.	1	. .	. .
சிவகெங்கை	சிவகெங்கை, மடகுப்பட்டி, காளையார் கோயில், கல்லல் பிர்காக்கள்.	1	. .	. .
திருப்பத்தூர்	திருப்பத்தூர் தாலுகா (காரைக்குடி, கல்லல் பிர்காக்கள் நீங்கலாக).	1	. .	. .
காரைக்குடி	காரைக்குடி பிர்கா; தேவகோட்டை பிர்கா.	1	. .	. .
திருவாடானை	திருவாடானை தாலுகா (தேவகோட்டை பிர்கா நீங்கலாக).	1	. .	. .
ராமநாதபுரம்	ராமநாதபுரம் தாலுகா.	1	. .	. .

திருநெல்வேலி ஜில்லா

பலாவூர்	பலாவூர், ராதாபுரம், திசயன் விலை பிர்காக்கள்.	1	. .	. .
நாங்கனேரி	பலியூர், நாங்கனேரி, விஜயநாராயணம், மூலைக்கரைப்பட்டி, சிங்கிகுளம் பிர்காக்கள்.	1	. .	. .
சேர்மாதேவி	கலக்காடு பிர்கா, மேலசேவல், சேர்மாதேவி, பாப்பாக்குடி பிர்காக்கள்.	1	. .	. .
அம்பா சமுத்திரம்	அம்பாசமுத்திரம், கடயம் பிர்காக்கள்.	1	. .	. .
ஆலங்குளம்	ஆலங்குளம், கீழ்ப்பாவூர் பிர்காக்கள்.	1	. .	. .
தென்காசி	தென்காசி, கடயநல்லூர், பாம்புலி பிர்காக்கள்.	1	. .	. .
சங்கரநயினார் கோவில்	சங்கரநயினார் கோவில் தாலுகா (திருவேங்கடம் பிர்காவும் பழயகோட்டை பிர்காவில் சில கிராமங்களும் நீங்கலாக).	2	1	. .
திருநெல்வேலி	திருநெல்வேலி தாலுகா.	2	1	. .
தூத்துக்குடி	தூத்துக்குடி பிர்கா.	1	. .	. .
திருச்செந்தூர்	ஆழ்வார் திருநகரி, ஆத்தூர், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், வளநாடு, ஆறுமுகமங்கலம், கருங்குளம் பிர்காக்கள்.	2	1	. .
சாத்தங்குளம்	உதங்குடி, சாத்தங்குளம் பிர்காக்கள்.	1	. .	. .
விளாத்திகுளம்	விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் பிர்காக்கள்.	1	. .	. .
கோயில்பட்டி	கோயில்பட்டி, மாசரப்பட்டி பிர்காக்கள்	1	. .	. .
கடம்பூர்	கயத்தூர், கடம்பூர் பிர்காக்கள், திருவேங்கடம் பிர்கா; பழங்கோட்டை பிர்காவில் சில கிராமங்கள்.	1	. .	. .

நீலகிரி ஜில்லா

நீலகிரி	நீலகிரி ஜில்லா.	2	1	. .

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

ஜீவனாம்சப் பத்திர'த்தின் மூலம் மனைவிக்குச் சொத்துக்களைக் கொடுத்த முஸ்லீம் அம் மனைவியை 'தலாக்' செய்து விட்டால், சொத்தை திரும்ப அடைய முடியமா?

[ஆதாரம். 64 லா வீக்லி 756]

ஒரு முஸ்லீம் 1916 ல் மணம் செய்து கொண்டார். புருடனுக்கும் மனைவிக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. ஆகையால் புருடன் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டார். ஆனால் முதல் மனைவியை மணம் செய்து கொள்ளுவதற்கு முந்தி அவளுக்குச் சில சொத்துக்களை, அவள் ஆயுள் வரை அனுபவிக்கும்படி எழுதிவைப்பதாக ஒரு எக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்திருந்தார். அதன்படி அவர் நடக்கவேண்டுமென்று முதல் மனைவி இப்பொழுது வற்புறுத்தவே, அவர் முதல் மனைவிக்குச் சில சொத்துக்களை 1919-ல் ஜீவனாம்சப் பத்திர மூலம் கொடுத்தார்.

“நான் உன்னுடைய சம்மதமின்றி இரண்டாவது கலியாணம் செய்து கொண்டு விட்டபடியாலும், உன்னுடைய ஜீவனத்திற்கு ஒரு வகை செய்ய வேண்டுமென்று நீ என்னைப் பல முறை கேட்டுக் கொண்டபடியாலும், நம்முடைய ஜாதிப் பஞ்சாயத்தார்கள் சொன்னபடி ரூ,800 பெறுமான இதனடியில் கண்ட சொத்துக்களை நான் இன்று உன்னுடைய சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் விட்டு விட்டேன். நீ உன் ஆயுள் வரை இதில் கண்ட வீட்டில் வசித்தும் நிலங்களுடைய வரும்படிகளை அடைந்தும் வரவேண்டியது: இச்சொத்துக்களை நீ அடமானம் ஒத்தி, கிரயம் முதலிய எவ்வித மான பராதீனமும் செய்யக் கூடாது. உன் ஆயுசுக்குப் பின் இச்சொத்துக்களை நானும் என் வார்சுகளும் அடைவோம்” என்ற அர்த்தம் வரும் வாசகங்களை உபயோகித்து, அவர் தம் முதல் மனைவிக்கு மேலேகண்ட ஜீவனாம்சப் பத்திரம் எழுதி வைத்தார். அப் பத்திரத்தில் கண்ட சொத்துக்களை முதல் மனைவியே அனுபவித்து வந்தாள். பிறகு முதல் மனைவிக்கும் அவள் புருடனுக்கும் நடுவில் ஏற்பட்ட சச்சரவுகளையும் வழக்குகளையும் நாம் கவனிக்கவேண்டியதில்லை. மனஸ்தாபங்கள் முற்றி 1943-ல் கணவன் தம் முதல் மனைவியைத் 'தலாக்' செய்து விட்டார். அதனால் அவ்விருவர்களுடைய விவாகமும் ரத்தாகவே, இனி தம்மால் அவளுக்கு ஜீவனாம்சப் பத்திரப்படி கொடுக்கப்பட்ட சொத்துக்களை அவள் அனுபவிக்கும் உரிமை இல்லை என்றும் அப்பத்திரத்தை ரத்து செய்து அதில் கண்ட சொத்துக்கள் தம்முடைய சுவாதீனத்தில் திரும்பவேண்டுமென்றும் அவர் முன்சீப் கோர்ட்டில் 1944-ல் தாவா செய்தார். இத்தாவா முன்சீப் கோர்ட்டில் தள்ளப்பட்டது. ஆனால் சப்கோர்ட்டில் நடந்த அப்பீலில் கணவன் ஜயித்தார். 'தலாக்' அதாவது விவாக ரத்தான பின், அவளுக்குப் புருடனிடமிருந்து 'ஜீவனாம்சம்' கிடைக்கச் சட்டத்தில் இடமில்லை என்றும், அக்காரணத்தினால் புருடன் எழுதிவைத்த ஜீவனாம்சப் பத்திரம் உயிரிழந்து விட்டதென்றும் சப்ஜட்ஜ் அபிப்பிராயப்பட்டு மேற்கண்டபடி தீர்ப்புச் செய்தார். முதல் மனைவி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள். இதில் மனைவிதான் ஜயித்தாள். இச்சொத்துக்களைக் கணவன் மனைவியின் ஆயுள் வரை திரும்ப வாங்கமுடியாதென்று உயர் நீதிபதி அவர்கள்

அபிப்பிராயப்பட்டனர். விவாகம் ரத்தான பிறகு மனைவிக்கு ஜீவனாம்சம் கிடைக்குமா என்ற பிரச்னை இவ்வழக்கில் எழவில்லை என்றும்; ஒரு பத்திரத்தின் மூலம் தம் மனைவிக்குக் கொடுக்கப்பட்ட சொத்துக்களை, 'தலாக்' செய்த காரணத்தினால் கணவன் அவைகளைத் திருப்ப வாங்கமுடியுமா என்ற பிரச்னைதான் இவ்வழக்கில் எழுகின்ற தென்றும்; புருடன் பெண்சாதி என்ற உறவு அவ்விருவர்களுக்குள் இருக்கும் வரைதான், மனைவி அச்சொத்துக்களை அனுபவிக்கக்கூடு மென்று எவ்வித நிபந்தனையும் அப்பத்திரத்தில் காணப்படவில்லை என்றும்; அவ்வித ஷரத்து ஒன்று வியக்தமாக இல்லாவிட்டாலும், அப்பத்திரத்தில் அது தொக்கி நிற்கின்றதாகப் பாவிக்கச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றும், உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டு, பத்திர ஷரத்தக்கு விரோதமாகக் கணவனால் செய்யப்பட்ட தாவா தள்ளப்பட்டது. விவாகரத்து ஏற்பட்டாலும் ஜீவனாம்சப் பத்திரத்தில் கண்ட சொத்துக்களை மனைவி தன் ஆயுள் வரை அனுபவிக்கலாம் என்ற உரிமை உறுதிசெய்யப்பட்டது.

இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டப்படி — விதவையின் பாகம் எவ்வளவு?

இதில் மாறுதல்கள் ஏற்பட இடமுண்டா?

[ஆதாரம்:—1951 ஆல் இந்தியா ரிபோர்ட்டர் — பம்பாய் - 309.]

இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டத்தில் (Hindu Women's Rights to property Act 1937.) ஒரு சிக்கலான பிரச்னை இப் பம்பாய் வழக்கில் ஏற்பட்டது. இப்பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் இந்தியாவிலுள்ள வெவ்வேறு ஹைகோர்ட்டுகள் வெவ்வேறு வித மான அபிப்பிராயங்கள் எடுத்துக் கொண்டிருக் கின்றனர்.

வழக்கின் விஷயங்களைத் தெரிந்துகொண்டு பிறகு சட்ட பிரச்னையைக் கவனிப்போம். விட்டல், வெங்கட்டராமன், நாகப்பா என்ற மூன்று இந்து சகோதரர்கள் இருந்தார்கள். பிரிபடாத குடும்பம். முதல் சகோதரர் 1937-க்கு வெகு காலம் முன்பே இறந்து போனார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. கங்கா என்ற மனைவி மட்டில் உண்டு.

இரண்டாவது சகோதரர் வெங்கடராமன் 18—6—1938-ல் இறந்தார். அவருக்கு மூக்காபாய் என்ற மனைவியும் மஞ்சுநாதன் என்ற மகனும் இருந்தனர். ஆனால் அம்மகனும் 18—2—1939-ல் இறந்தார்.

மூன்று சகோதரர்களில் பாக்கி உயிருடன் இருந்தவர் கடைசி தம்பியாகிய நாகப்பாதான்.

இந்நிலைமையில் இரண்டாவது சகோதரருடைய மனைவி மூக்காபாய், தன் கொழுந்தன் நாகப்பா மீது பாக வியாஜ்யம் செய்து, தமக்குக் குடும்பச் சொத்துக்களில் உள்ள சரிபாதி வீதத்தை, பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டாள்.

நாகப்பா பல கட்சிகள் சொன்னார். மற்றக் கட்சிகளை எல்லாம் விட்டுவிட்டு அவர் எடுத்துக் கொண்ட முக்கியமான சட்டக்கட்சியை மட்டில் கவனிப்போம். வாதி மூக்காபாய் பிராதில் பாதி பாகம் கேட்டிருப்பது அவளுக்குக் கிடைக் காதென்றும் அவளுக்குக் குடும்பச் சொத்துக் களில் 4-ல் 1 பாகம்தான் கிடைக்குமென்றும் ஒரு கட்சி சொன்னார். மூக்காபாயிக்குக் கிடைக்கக்கூடிய பாகம் எவ்வளவு? சரிபாதியா அல்லது நாலில் ஒரு பாகம்தானா? இதுதான் சட்டப் பிரச்னை.

நாகபுரி ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயம் தழுவப்பட்டிருந்தால் மூக்காபாயிக்கு நாலில் ஒரு பாகம்தான் கிடைக்கும். பாட்னா ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயப் படிக்கும் அவளுக்கு அதே பாகம்தான் கிடைக்கும். ஆனால் பம்பாய் ஹைகோர்ட்டார் மூக்காபாயிக் குக் குடும்பச் சொத்துக்களில் சரிபாதி பாகம் கிடைக்குமென்று இவ்வழக்கில் தீர்ப்பளித் தனர். நாகபுரி, பாட்னா உயர்நீதிபதிகளின் அபிப்பிராயங்கள் சரி அல்ல என்று இவ்வழக் கில் பம்பாய் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் இரண்டு சென்னைத் தீர்ப்புகள் தாங்கள் கொண்ட அபிப்பிராயத்திற்கு ஆதாரமளிப்ப தாகப் பம்பாய் ஹைகோர்ட்டார் அவைகளைத் தழுவி இதில் தீர்ப்பளித்தனர்.

என் இவ்வித அபிப்பிராய பேதங்கள் ஏற் பட்டன என்று கவனிப்போம். 1937-ல் ஒரு மத்திய சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டம் (Hindu women's Right to Property Act 1937) என்று பெயர். இது அகில இந்தியா விலும் அமுலில் உள்ள சட்டம். இச்சட்டம் 14—4—1937-ல் அமுலுக்கு வந்தது.

இச்சட்டம் அமுலுக்கு வருமுன் ஒரு பிரி படாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்து விட்டால், அவருக்கு ஆண் மக்கள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி,

அவருடைய விதவைக்குக் குடும்பச் சொத்துக்களில் எவ்வித சொத்துரிமையும் கிடையாது. ஆனால் அவள் அக்குடும்ப ஐவேஜுகளிலிருந்து தம் ஆயுள் வரை ஜீவனாம்சம் மட்டில் அடையப் பாத்தியமுள்ளவளாக இருந்தாள். இறந்த இந்து பொதுக் குடும்பத்தைச் சேராத ஒரு தனி நபராக இருந்து அவருக்கு ஆண் மக்கள் இருந்தால், அவருடைய விதவைக்கும் சொத்துக்களில் பாத்தியம் ஒன்றும் கிடையாது. முன் சொன்னது போல் அவளுக்கு ஜீவனாம்ச பாத்தியம்தான். தம் கணவன் ஆண் மக்கள் இல்லாது இறந்து போனால்தான் மனைவி அவருடைய தனிச் சொத்துக்களை வார்சாக அடைவாள். ஆனால் 14—4—1937 முதல் இந்து விதவையின் நிலைமை மாறியது. அன்றுதான் மேற்சொன்ன இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டம் அமுலுக்கு வந்தது. அன்று தினமோ, அதற்குப் பிறகோ இறந்த ஓர் இந்துவின் விதவைக்குத் தம் கணவனுடைய சொத்துக்களில் ஒரு புதிய பாத்தியம் இச் சட்டத்தால் அளிக்கப்பட்டது. அவளுடைய ஜீவனாம்ச பாத்தியம் மறைந்தது; ஆனால் அதற்குப் பதிலாக அவளுக்கு இப்புது உரிமை ஏற்பட்டது. இச்சட்டத்தால் ஏற்பட்ட நிலைமையைக் கவனிப்போம் :—(1) பிரிபடாத இந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்தால் அவருக்குக் குடும்பப் பொதுச் சொத்துக்களில் என்ன பாத்தியம் இருந்ததோ, அதை அவருடைய விதவை அடைவாள். அவர் உயிருடனிருந்தால் எப்படி பாகம் செய்து கொள்ளலாமோ அதேவிதம் அவருடைய விதவையும் பாகம் செய்து கொண்டு, தம் வீதத்தைத் தனிமையில் அனுபவிக்கலாம். ஆனால் இந்தப் பாகச் சொத்துக்களை அவ்விதவை சாதாரணமாய்த் தம் ஆயுள் வரையில்தான் அனுபவிக்கலாம். இருந்தாலும் சில அவசியமான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால் இவைகளைப் பாராதீனம் செய்யும் உரிமையும் அவளுக்குண்டு. (2) இறந்த இந்து, ஒரு பொதுக் குடும்பத்தின் அங்கத்தினராக இல்லாமல் தனி நபராக இருந்தாலும், அல்லது பொதுக் குடும்பத்திற்குப் பாத்தியமில்லாத தனிச் சொத்துக்களை வைத்து விட்டு இறந்து போனாலும், அவர் தம் சொத்துக்களை உயில் மூலம் விநியோகம் செய்யாமல் மட்டில் இறந்து போனால் அவருடைய சொத்துக்களில் ஒரு மகனைப் போல் அவருடைய விதவைக்கும் பாத்தியமுண்டு. அதாவது அவ் விதவையும் ஒரு மகனைப்போலவே பாகம் அடைவாள்.

இச்சட்டப்படி மூக்காபாயின் பாத்தியங்கள் என்ன என்று இனி கவனிப்போம். அவளுடைய கணவன் இச் சட்டம் வந்த பிறகுதான் இறந்தார். அவர் இறந்த அன்றே (18—6—1938) அவருடைய பாத்தியங்கள் எல்லாம் அவருடைய மனைவி மூக்காபாயிக்கு வந்து விட்டன. அவள் அன்று தினம் பாகம் கேட்டிருந்தால் அவளுக்குக் குடும்பச் சொத்தில் 4-ல் 1 பாகம்தான் கிடைக்கும். ஏனென்றால் அவளுடைய கணவனுக்கும் அன்று அதே பாகம்தான் உண்டு. அது எப்படி என்றால், அவளுடைய கணவனுக்கும் அவருடைய மகன் மஞ்சுநாதனுக்கும் சேர்ந்து பாதி பாகம் உண்டு. அவருடைய தம்பி நாகப்பாவுக்குப் பாதி உண்டு. அவருக்கும் மஞ்சுநாதனுக்கும் உள்ள பாதியில் மஞ்சுநாதனுடைய பாதி (மொத்தத்தில் கால் பங்கு) போகப் பாக்கி அதாவது மொத்தத்தில் நாலில் ஒரு பங்கைத்தான் அவள் கணவன் வெங்கடராமன் அடைந்திருப்பார். அதே பாகம்தான் அவருடைய மனைவி மூக்காபாயிக்கும் கிடைத்திருக்கும்.

ஆனால் மூக்காபாய் அப்பொழுது பாக வியாஜ்யம் போடவில்லை. அவளுடைய மகன் மஞ்சுநாதன் 18—2—1939-ல் இறந்த பின்தான் இவள் பாகம் சேட்டாள். அன்று அவளுடைய புருடன் வெங்கடராமன் இருந்திருந்தால் குடும்பச் சொத்தில் அவருக்குச் சரிபாதி கிடைத்திருக்கும். தம் மகன் இறந்து விட்டதால் தம்பியின் பாகம் பாதி போகப் பாக்கிப் பாகம் பாதியையும் அவர் ஒருவரே அடைந்திருப்பார். அதே உரிமைதான் தனக்கும் இருக்கிறதென்று மூக்காபாயின் கட்சி. இது தான் பம்பாய் ஹைகோர்ட்டாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நாகபுரி, பாட்னா ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயம் என்ன என்றால் — கணவன் இறந்து போகும்போது அவருக்குக் குடும்பச் சொத்துக்களில் என்ன பாகம் உண்டோ அதே பாகத்தைத் தான் இச்சட்டப்படி அவருடைய மனைவி 'வார்சாக' அடைவாள். இப்பாகம் அப்படியே தான் இருக்கும். குடும்பத்தில் ஒருவர் இறந்து போய் விட்டதால் விதவையின் பாகம் அதிகரிக்காது; அதுபோலவே குடும்பத்தில் ஒருவர் பிறப்பதினாலும் இப்பாகம் குறைந்து விடாது; அவள் எப்பொழுது பாகம் பிரித்துக் கொண்டாலும் அதே பாகம்தான் அவளுக்குக் கிடைக்கும் —என்பதுதான்.

பம்பாய் ஹைகோர்ட்டின் அபிப்பிராயம் என்னவென்றால் — கணவன் இறந்த தேதி

யைக் கவனிக்க வேண்டியதில்லை. அவருடைய உரிமைகளை அடைந்த விதவை என்று தினம் பாகம் கேட்கின்றாளோ அன்று அவளுடைய கணவன் உயிருடன் இருந்து அவரே பாகம் கேட்டால் அவருக்கு என்ன பாகம் கிடைக்குமோ, அதே பாகம் அவருடைய விதவைக்கும் கிடைக்கும் - என்பதுதான். ஏனென்றால் குடும்பச் சொத்துக்களில் அவளுடைய கணவனுக்கு என்ன உரிமைகள் இருந்தனவோ அதே உரிமை அவர் இறந்தபின் அவருடைய விதவைக்கு உண்டென்று அச்சட்டத்தில் இருப்பதால், சட்டத்தால் அவருக்கு அளிக்கப்பட்ட இந்த உரிமை 'வார்சு' உரிமை அல்ல. இது ஒரு விசேஷ உரிமை என்றும் அபிப்பிராயப்பட்டனர்.

சென்னை ஹைகோர்ட்டாரால் ஒரு தீர்ப்பில் (A. I. R. 1943 — மதராஸ் 245) இறந்த இந்து ஒருவரின் சொத்துக்களை அவருடைய இரண்டு மகன்களும் விதவையும் அடைந்தார்கள். அவர்களுக்கு வரவேண்டிய கடனை வசூல் செய்ய அவ்விதவை 'வார்சு' சர்டிபிகேட் வாங்க வேண்டியதில்லை என்று உயர்நீதிபதி ஹார்வில் அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். ஏனென்றால் இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டப்படி கணவனுடைய சொத்தை அடையும் அவருடைய விதவை அவருடைய 'வார்சு' அல்ல என்பதால். வேறு ஒரு சென்னை வழக்கில் (I. L. R. 1945 மதராஸ் 402) ஒரு இந்தவும் அவருடைய மகனும் ஒரே குடும்பமாக இருந்தனர். மகன் இறந்தான். அம்மகனுக்கு மனைவி மட்டில் உண்டு. மகன் இறந்தபின் தகப்பன் வேறு ஒரு மகனைச் சுவீகாரம் செய்து கொண்டார். பிறகுதான் இறந்த மகனுடைய விதவை பாகம் கேட்டுத் தாவா செய்தாள். கணவன் இறந்தவுடன் அவள் பாகம் கேட்டிருந்தால் குடும்பச் சொத்தில் அவளுக்குப் பாதி கிடைத்திருக்கும். ஆனால் சுவீகார மகன் ஒருவர் குடும்பத்தில் புகுந்த பிறகு அவள் பாகம் கேட்டதால், அவளுக்குக் குடும்பச் சொத்தில் மூன்றில் ஒரு பங்குதான் உண்டென்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இவ்விரண்டு மதராஸ் தீர்ப்புகளும் இந்தப் பம்பாய் வழக்கில் பின்பற்றப்பட்டன.

வரிகள்

விற்பனைவரி — விதிகள் திருத்தம். தாற்காலிக வரியையும் அதிகரிக்கலாம்.

ஒவ்வொரு வியாபாரியும் முந்திய வருடத்திய மொத்த வியாபாரத் தொகைக் கணக்கு அனுப்புவதை ஆதாரமாக வைத்துக்கொண்டுதான் அவருக்கு நடைமுதல் வருடத்திற்கும் ஒரு 'தாற்காலிக வரி விதிப்பு' (Provisional Assessment) போடப்படுகிறது. பிறகு அவருடைய முந்திய வருடத்திய கணக்குகளை வரி விதிக்கும் அதிகாரி பரிசீலனை செய்யும்போது, அவருடைய மொத்த வியாபாரம் அதிகத் தொகைக்கு நடந்திருக்கிற தென்று அவ்வதிகாரி நிச்சயம் செய்தாலும், அல்லது புதிதாகத் தெரியவந்த விஷயங்களிலிருந்து வியாபாரியின் உண்மையான மொத்த வியாபாரத் தொகைக்குள்ள தாற்காலிக வரி விதிப்பு ஏற்படாமல் போய்விட்டாலும், வரி அதிகாரி 'தாற்காலிக வரி விதிப்பையும்' உயர்த்தலாம் என்று அவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி உயர்த்தப்படுமுன் வியாபாரிக்கு நோட்டீஸ் அனுப்பி யுக்தமான விசாரணை நடத்திய பின்புதான் தாற்காலிக வரியும் உயர்த்தப்படும். ஆனால் முந்திய வருடத்தின் மொத்த வியாபாரம் அதிகம் என்று நிச்சயம் செய்யப்பட்ட காரணத்தினால் மட்டில் தாற்காலிக வரியும் உயர்த்தப்பட்டால், வியாபாரிக்கு நோட்டீஸ் வராது. இப்படி விற்பனை வரி விதி 17-ல் ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

[4-9-1941 - சென்னை சர்க்கார் கெஜட் - பாகம் I ருல் சப்ளிமெண்ட் - 502]

விற்பனை வரி விதிகள் திருத்தம்

அப்பீல் டிரிபுனல் சம்பந்தமாயும் அப்பீல்கள் கொடுக்கும் விஷயமாயும் விற்பனை வரி விதிகளில் கீழேகண்டபடி சேர்க்கப்படிருக்கின்றன:—விற்பனை வரி விதிப்பு சம்பந்தமான அப்பீல்களை விசாரிக்க 'அப்பீல் டிரிபுனல்' (Appellate Tribunal) என்ற ஒரு பிரத்தியேக கோர்ட் 1951 ஆம் வருடத்திய 6 வது சென்னைச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1951 "வக்கீல்" ஜூன் இதழ் பக்கம் 5 பார்க்கவும். அப்பீல் டிரிபுனலில் மூன்று அங்கத்தினர்கள் இருப்பார்கள். அதன் தலைவர் ஒரு ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துக்குக் குறையாதவராக இருப்பார் என்று திருத்தச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு அங்கத்தினர்களுக்குள் ஒருவர் வியாபாரவரி விதிப்பு இலாகாவில் டிப்டிகமிஷனரின் அந்தஸ்துக்குக் குறையாதவராக இருக்க வேண்டுமென்றும், மற்றவர் உத்தியோகப் பற்றில்லாதவராகவும் 'சார்டர்ட் அகவுண்டண்ட்' பரீட்சையில் தேரியவராகவும் இருக்க வேண்டுமென்றும் இப்பொழுது விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. மற்றவிதிகள்:—விற்பனை வரி விதிக்கும் அதிகாரியின் உத்தரவின் மீது சி. டி. ஒக்கு (கமர்சியல் டாக்ஸ் ஆபீசருக்கு) செய்யும் அப்பீல் நமூனா 10 ன்படி இருக்க வேண்டும். சி. டி. ஒக்குக் கொடுக்கும் பரிசீலனை மனு நமூனா 11 ன் படியும்; டிப்டி கமிஷனர் அல்லது ரிவன்யூ போர்டுக்குக் கொடுக்கும் பரிசீலனை மனு நமூனா 12ன் படியும் இருக்கவேண்டும். (குறிப்பு:— ஏற்கனவே இருக்கும் விற்பனை வரி விதி 12 (5)ல் நமூனாக்கள் 10, 11ன் படி கமிஷன் ஏஜண்டுகள் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று இருப்பதால் இப்பொழுது சி. டி ஒவுக்கு அப்பீல் நமூனா 10ன் படியும் பரிசீலனை மனு நமூனா 11ன் படியும் இருக்கவேண்டுமென்று இப்புது விதிகளில் இருப்பது பொருந்தவில்லை— ஆசிரியர் "வக்கில்") அப்பீல் டிரிபுனலுக்குச் செய்யப்படும் அப்பீல் நமூனா 13 ன் படி இருக்க வேண்டும்; அப்பீல் மனுவுக்கும் அப்பீல் செய்யப்படும் உத்தரவுக்கும் நான்கு பிரதிகள் அனுப்பவேண்டும். இதில் ஒன்று அசல் உத்தரவாகவோ சர்டிபைட் காபியாகவோ இருக்கவேண்டும். அப்பீல் மனுவுடன் ஆட்சேபிக்கப்படும் வரித்தொகை எவ்வளவோ அதன் பேரில் ரூபாய் 100க்கு ரூபாய் ஒன்று வீதம் உள்ள தொகையை சர்க்கார் கஜானாவில் கட்டி அதன் ரசீதும் அப்பீல் மனுவுடன் சேர்த்து அனுப்பவேண்டும். ஆனால் குறைந்த கட்டணம் ரூ. 25. ஆட்சேபனையுள்ள தொகை எவ்வளவாக இருந்தாலும் ரூபாய் 100க்கு மேல் கட்டணம் கட்டவேண்டியதில்லை. அப்பீல் டிரிபுனலின் தீர்ப்பை அவர்களே புனர் ஆலோசனை (Review) செய்யப் போடும் மனு நமூனா 14 ன் படி இருக்கவேண்டும். இதற்கும் அப்பீல் போலவே மனுவும் கட்டணமும் கட்டவேண்டும். அப்பீலிலோ, புனர் ஆலோசனை மனுவிலோ ஜெயித்தவர்களுக்கு இந்த ஜாடா கட்டணமுமோ அதன் பாகமோ திருப்பிக் கொடுக்க டிரிபுனல் உத்தரவிடலாம். ஹைகோர்ட்டுக்குப் போடப்படும் பரிசீலனை மனு நமூனா 15 ன் படியும் புனராலோசனை மனுக்கள் நமூனா 16, 18 ன் படியும் இருக்கவேண்டும். ஹைகோர்ட்டுக்கு ரிவன்யூ போர்டின் உத்தரவுகளின் மீது செய்யக் கூடிய அப்பீல் மனுக்கள் நமூனா 17 ன் படி இருக்கவேண்டும். அப்பீல் டிரிபுனல் அல்லது ஹைகோர்ட்டின் உத்தரவுப்படி திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய வரிகளை அவ்வுத்தரவு கிடைத்த இரண்டு மாதங்களுக்குள் வரிவிதித்த அதிகாரி திருப்பிக் கொடுக்கவேண்டும். அதிகவரி வசூல் செய்ய வேண்டுமானாலும் அவரே செய்யலாம் இவ்விதிகளின் கடைசியில் மேற்கண்ட நமூனாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(31—8—1951 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் 1-விசேஷ வெளியீடு.)

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

90. **கேள்வி:** (ஆறுமுகஞ் செட்டியார் - திருநெல்வேலி டவுன்) 1946-ம் வருடத்தில் ஒரு பெண் ரூ. 600-க்கு நஞ்சை நிலம் ஒத்தி வாங்கி இருந்தால், வருடம் 1-க்கு கழிவு எவ்வளவு? விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தில் ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறு நிபந்தனை என்று உண்டா?

பதில்: வருடம் 1-க்கு அசலில் ரூ. 20 வீதம் கழிவு ஏற்படும். 1-10-1937ல் ஒரு ஸ்திரீக்குச் சேரவேண்டிய கடனைப்பற்றித்தான் ஒரு விதி விலக்கு இருக்கிறது. அத்தேதிக்குப் பின் ஒரு ஸ்திரீ கொடுத்த கடனுக்கும், ஒரு ஆண் கொடுத்த கடனுக்கும் சட்டத்தில் யாதொரு வித்தியாசமுமில்லை.

91. **கேள்வி:** (கருப்பஞ் செட்டியார்) இருதாரத் தடைச் சட்டம் செல்லாதென ஹைகோர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் மனுக்களில் ஹைகோர்ட்டார் தீர்ப்பு அளித்தாகி விட்டதா?

பதில்: இச்சட்டம் செல்லும் என்று 24-9-51ல் சென்னை ஹைகோர்ட் உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்துவிட்டனர்.

92. **கேள்வி:** (ராமனாத செட்டியார் - தாராபுரம்) ஒரு கடையின் குமாஸ்தா தொடர்ச்சியாய் 3 வருடம் வேலை செய்த பிறகு, சேர்த்து வைக்கப்பட்டிருந்த 'பிரிவிலேஜ் லீவி'ல் எடுத்தது போக, மீதமுள்ள லீவு நாட்களுக்கு, ஷையார் தொடர்ச்சியாய் வேலையில் இருந்தாலும் வருஷ முடிவில் எடுக்கப்படாமல் பாக்கியிருக்கும் லீவு நாட்களுக்கு வீதாசாரச் சம்பளம் கொடுக்கவேண்டுமா? கொடுக்கவேண்டுமானால் எப்பொழுது கொடுக்கவேண்டும்?

பதில்: ஷாப் சட்டப்படி ஒரு வருடம் வேலை பார்த்த ஒரு சிப்பந்திக்கு அதற்கடுத்த வருடத்தில் 12 நாட்கள் தம் இஷ்டப்படி யாதொரு காரணமும் காட்டாமல் 'லீவு' எடுத்துக் கொள்ளும் உரிமை உண்டு. இந்த லீவு நாட்களை இரண்டு வருடங்களுக்குத் தான் ஒரு சிப்பந்தி சேர்த்து வைக்கலாம். 3 வருடம் தொடர்ந்து வேலை செய்த ஒரு சிப்பந்தி யாதொரு பிரிவிலேஜ் லீவும் எடுக்காமலிருந்தாலும் 24 நாட்களுக்கு மேல் எவ்வருடமும் இந்த லீவு எடுக்கமுடியாது. மேலும் சிப்பந்தி இஷ்டப்பட்டால் சம்பளத்துடன் கூடிய இந்த 'லீவு' எடுத்துக்கொள்ளலாமே ஒழிய, வேலையிலிருந்து கொண்டே எடுக்காத லீவு நாட்களுக்கு உபரிச் சம்பளம் வேண்டுமென்று கேட்க ஷாப் சட்டத்தில் இடமில்லை.

93. **கேள்வி:** (நடராஜ் நாடார் - பணகுடி) புதிய கிராம பஞ்சாயத்து சட்டப்படி 15 மெம்பர்கள் கொண்ட போர்டில், கோர்ட்டு நடத்த 'கோர'த்திற்கு எத்தனை மெம்பர்கள் ஆஜராக வேண்டும். கோர்ட்டு 'கோரம்' இருந்து, தலைவரோ, உபதலைவரோ, கோர்ட்டுக்கு வராதிருந்தால் ஆஜர் மெம்பர்கள் கோர்ட்டை நடத்தலாமா?

பதில்: 'வில்லேஜ் கோர்ட்ஸ் ஆக்ட்' என்ற கிராம கோர்ட் சட்டத்தின் செக்ஷன் 9 (5) (6)ன் படி 3 அங்கத்தினர்களாவது ஆஜரில்

இருந்தால் தான் கோர்ட் நடத்தலாம். இதற்குத் தான் 'கோரம்' என்று பெயர். தலைவர், உபதலைவர் இருவரும் ஆஜராகா விட்டால், ஆஜரில் இருப்பவர்கள் அன்றைய நடவடிக்கைகளை நடத்த அவர்களுக்குள் ஒருவரைத் தலைமை வகிக்கும்படி தேர்ந்தெடுத்துக் கொண்டு கோர்ட்டை நடத்தலாம். புதிய கிராம பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 132-ன் படி புதிய பஞ்சாயத்துக்களே கிராம கோர்ட் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்துக் கோர்ட்டுகளாக பாவிக்கப்படுவதால், இவைகளுக்கும் மேலே குறிப்பிடப்பட்ட விதிகள் தான் பொருந்தும்.

94. **கேள்வி:** (ராமசாமி - பவானி) வீட்டு வாடகை மணியார்டர் செய்தால் மறுதளிக்கப்பட்டு திரும்பி வந்துகொண்டே இருந்தால், எந்தப் பாங்கியில் போடலாம்? யார் பேரில்? கட்டடக்காரர் பெயருக்கா? குடியிருப்பவர் பெயருக்கா?

பதில்: சென்னை ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டம் அமுலில் உள்ள இடங்களில் அச்சட்டத்தின் புதிய செக்ஷன் 6 A ன் படி:— வீட்டுக்காரர் தமக்குச் சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய வாடகைப் பெற்றுக்கொள்ள மறுத்தாலும் உழப்பினாலும் வாடகை கொடுக்க வேண்டியவர் அவருக்கு ஒரு நோட்டீசு கொடுக்கலாம். அதாவது எந்தப் பாங்கியில் வாடகைத் தொகையைத் தாம் கட்டவேண்டுமென்று தமக்குத் தெரிவிக்கும்படி வீட்டுக்காரரை நோட்டீஸ் மூலம் அவர் கேட்கலாம். நோட்டீஸ் கிடைத்த 10 தினங்களுக்குள், வீட்டுக்காரர் ஒரு பாங்கியைக் குறிப்பிட்டு அதில் தம் பெயருக்கு அதாவது கட்டடத்தின் சொந்தக்காரர் பெயருக்கு வாடகையைக் கட்டிவர வேண்டுமென்று பதில் எழுதவேண்டும். கட்டடம் எந்த ஊரில் இருக்கிறதோ அதே இடத்தில் உள்ள ஒரு பாங்கியை அவர் குறிப்பிட வேண்டும். அப்படி அந்த ஊரில் ஒரு பாங்கு கூட இல்லாவிட்டால், அந்த ஊர் எல்லையிலிருந்து 3-மைல்களுக்குள் இருக்கும் ஒரு பாங்கியைக் குறிப்பிடவேண்டும். ஒரு தடவை ஒரு பாங்கியைக் குறிப்பிட்டாலும் மறுபடி அதை மாற்றி மேற்கண்டபடியுள்ள வேறு பாங்கியைக் குறிப்பிட்டு அதன் விபரத்தை வாடகை கொடுக்க வேண்டியவருக்குக் கட்டடக்காரர் எழுத்து மூலம் தெரிவிக்கலாம். அவ்விதம் குறிப்பிடப்படும் பாங்கியில் வாடகைத் தொகையை, குடியிருப்பவர் கட்டிவரவேண்டும். மேற்கண்டபடி கட்டடக்காரர் ஒரு பாங்கியைக் குறிப்பிடத் தவறினால், வாடகை கொடுக்க வேண்டியவர், வாடகைத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பிவர வேண்டும். மணியார்டர் கமிஷனை வாடகைத் தொகையில் கழித்துக்கொள்ளலாம். கட்டடக்காரர் தாம் வாடகையை இனி நேரிலேயே வாங்கிக் கொள்கிறேன், என்றாவது மேற்கண்டபடி ஒரு பாங்கியில் கட்டும்படி குறிப்பிட்டாவது வாடகை கொடுக்கவேண்டியவருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கும் வரை, வாடகை கொடுக்க வேண்டியவர் மேற்கண்ட விதம், வாடகையை மணியார்டர் மூலம் அனுப்பிவரவேண்டும்.

இனம் நிலங்களைப் பற்றிய சட்டங்கள்

"30—9—51 ல் அமுலுக்கு வரும் இந்து மத ஸ்தாபன சட்டத்தால், கோவில், மடம், கட்டளை, அர்ச்சகர், தேவதாவி இனம் நிலங்களில் மாறுதல்கள்"—"1951 வருஷத்து ஊழிய இனம் சட்டம்" — "இனம் நிலங்களிலுள்ள பாத்யதைகள்" (எல்லாம் தமிழ்). ரூ. 1 M. O. செய்து மூன்றையும், போஸ்டு சர்டிபிகேட்டுடன் புக்போஸ்ட்டில் பெறலாம்.

தொழிற்சாலை சட்டமும் எல்லா நமூனக்களும் விலை 12 அணா.

ரெங்கநாதன்

16, பாபு நாயக்கன் தெரு,

கும்பகோணம்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.